# இறை மணி மாலை



விழிசைச் சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை மணி மாலை

(இறைவனின் மீது பாடப்பட்ட கவிதைகளின் தொகுதி)

விழிசைச்சிவம்

(அமரர் செ. சிவசுப்பிரமணியம்)

வெளியீடு:

கலை இலக்கியக் களம்

தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IRAI MANI MALAI

*(A Collection of Poems)*

*by*

**VILISAI SIVAM**

***( S. Sivasubramaniam )***

**Publishers & Copy Right**

***LYCEUM OF LITERARY &***

***AESTHETIC STUDIES***

*Tellipalai.*

**Date of Publication**

**4-12-1999**

**Price: Rs. 75/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

இரட்டை மணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணி மாலை என்ற பிரபந்தங்கள் பக்தியிலக்கியத்திற் சிறப்பிடம் பெறுபவை. வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் கொண்டது இரட்டை மணிமாலை. அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை மூன்றும் பயில்வது மும்மணிக் கோவை. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா நான்காலும் இயல்வது நான்மணிமாலை. இப்பனுவல்கள் யாவும் அந்தாதித் தொடையாக அமைவன.

இவ் வரையறைகளுக்குள் நின்று கொண்டு பாடுவது எளிதல்ல. காரைக்காலம்மையார் (திருவிரட்டை மணிமாலை). சேரமான் பெருமாள் (திருவாரூர் மும்மணிக்கோவை), நக்கீர தேவர் (திருவலஞ்சுழி மும்மணிக் கோவை), பட்டினத்துப் பிள்ளையார் (கோயில் நான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை) என்போர் இத்துறையில் முன்னோடிகள் எனலாம். நம்பியாண்டார்நம்பி, கபிலதேவ நாயனார் முதலிய பிறரும் இவ்வகைப் பனுவல்கள் செய்துள்ளனர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நால்வர் நான்மணி மாலையும், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய புதுவை மணக்குளத்து விநாயகர் நான்மணிமாலையும் புகழ்பெற்ற பிற்கால நூல்கள்.

இம்மரபை ஒட்டி ஈழத்திலும் இவ்வகை நூல்கள் பாடப் படுகின்றன. ''சொக்கன்'' பாடிய நல்லூர் நான்மணிமாலை, சைவப்புலவர் வை. க. சிற்றம்பலம் பாடிய இணுவை சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை என்பன குறிப்பிடத்தக்கவை. இப்போது ''விழிசைச்சிவம்'' யாழ்ப்பாணத்தின் பல்வேறு கோயில்கள்மீது பாடிய தொகுப்பு நூல் ஒன்று வெளிவருகிறது.

எந்த ஓர் இலக்கியமும் அது தோற்றுகின்ற காலத்தை ஏதோ ஒரு வகையில் பிரதிபலித்தே தீரும். பக்தி இலக்கியமும் இதற்கு விதிவிலக்கல்ல. விழிசைச்சிவம் எழுதும் இந்நூல் எழும் காலம் பொல்லாதது. போர் விளைவிக்கும் அழிவு மக்கள் முன்னொருபோதும் கண்டறியாதது. அம்மட்டோ! இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து அகதிகளாய் ஆலயங்களிலும், கல்விக்கூடங்களிலும் தஞ்சம் அடைந்துள்ள மக்கள்மீது குண்டு, ஷெல்வீசித் தாக்கும் கொடுமை – கொடுங்கோன்மை!

இதனால் அல்லற்பட்டு ஆற்றாது அழுது உலகமெல்லாம் புரக்கும் அன்னையிடம் முறையிடும் திக்கற்றோர் - தீனர் குரலாக இப்பனுவலின் ஒரு பகுதி ஒலிப்பதைப் பாருங்கள்;

'' அம்மே அகதிகள் ஆனோம்
ஓரிடந்தனிலும் உறுதியா யிருக்க
முடியவே இல்லை; முன்பு செய் பாவம்
என்ன என்பதும் எம்மா லறிய
முடியவே இல்லை!''
'' ... இக்குவலயத்தில்
ஓடும் நிலையை ஒழித்தெமைக் காத்து
ஆறுதல் உரையே!.''

ஆற்றொழுக்கான கவிதையாக இத்தொகுப்பு முழுவதையும் பாடிய விழிசைச் சிவத்தை வாழ்த்துவோம்;

சோ. ப.
முன்னாள் அதிபர்,
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

''வயலருகே நின்ற பல தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டு வீழப் பட்டுப்போச்சு இன்று''

என்று பாடினார் எனது மதிப்பிற்குரிய ஆசிரியர்பிரான் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை.

போர் என்ற புயல் வீசி அடித்ததினால் எங்கள் கிராமத்திலும் பல தென்னைகள் உடனே பட்டுப் போயின. வேறு பலவோ போர் ஏற்படுத்திய உடல், உளத்தாக்கங்களை இனியும் தாங்க மறுத்து மறைந்துபோயின. எங்கள் வீட்டில் அம்மாத் தென்னை பட்டு இரு மாதங்களில் அப்பாத் தென்னையும் பாறி விழுந்துவிட்டது.

எங்களூரின் பல தென்னைகள், தென்னைகளே இல்லாத ஐரோப்பாவிற்குச் சென்று மறைய, இங்கே நின்ற சில தென்னைகள் கவிதைத் தேங்காய்களைக் காய்த்தன. எங்கள் வீட்டில் இத் தேங்காய்கள் பல பக்தித் தேங்காய்கள் ஆயின.

சொந்த இடத்தை விட்டுப் பெயர்ந்த நாங்கள் 1990 ஐப்பசி மாதம் தொடக்கமாக அளவெட்டியிலும், 1992 ஆனி மாதம் தொடக்கமாக நெல்லியடி வடக்கிலும், 1993 மாசி மாதம் தொடக்கமாக இணுவில் கிழக்கிலும், 1995 ஆகஸ்ட் முதல் கரவெட்டியிலும் பின் 1996 மே மாதம் முதல் திரும்பவும் இணுவில் கே. கே. எஸ். வீதியிலும் மாறி மாறி வசிக்க நேர்ந்த போது அந்தந்தக் கிராமங்களில் உள்ள ஆலயங்களுக்கெல்லாம் இந்தக் கவிதைத் தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

அளவெட்டிக் கும்பழாவளை விநாயகர், தெல்லிப்பழை துர்க்காதேவி, பொலிகண்டிக் கந்தவனநாதர், இணுவில் கந்தசுவாமி, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார், இணுவில் சிவகாமி அம்மன், தச்சன்தோப்புச் சிந்தாமணி விநாயகர் போன்றவர்கள் எல்லாம் இத்தேங்காய்களினைப் பெற்றார்கள்.

ஆம். விழிசைச்சிவம் என்ற புனைபெயரில் கவிதைகள் பல யாத்த என் தந்தையார் அமரர் செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் (முன்னாள் அதிபர், தெல்லிப்பழை சைவப்பிரகாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசாலை) இடப்பெயர்வின் துன்பத்தைப் பக்தி ரசம் சொட்டச் சொட்டப் பாடினார். அவரது ஆன்மா சாந்தி பெறச் செய்யக்கூடிய மிகச் சிறந்த பணி அவரது சில பனுவல்களையாவது தொகுத்து வெளியிடுதலே என்று எனக்குத் தோன்றுகிறது.

அவர் நோயுற்றிருந்த காலத்தில் அச்சுவாகனம் ஏற வேண்டிய நூல்கள் எவை என எனக்குக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்: அவரது விருப்பத்தின் ஒரு பகுதியையாவது நிறைவு செய்ய முடிவது திருப்தி தருகிறது.

அவரது இறுதிக் காலத்தில் ஒரு சில மாதங்கள் பேச முடியாதிருந்தார். கடைசியில் ஒரு சில வாரங்கள் எழுதவும் முடியாதிருந்தார். அப்போது அவரது மனத்தில் எத்தனை எத்தனை கவிதைகள் எழுந்தனவோ? மற்ற மனிதர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத தனது நிலைபற்றி எப்படி எப்படி எல்லாம் இறைவனுக்கு எடுத்துக் கூறினாரோ?

இறைவன் தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி கூறி அழைத்துக் கொண்டான்.

தந்தையார் உயிருடன் இருந்தபோது இத் தொகுப்பு வெளிவந்திருந்தால், அவர் தன் முன்னுரையில் என்ன எழுதியிருப்பாரோ?

என் பேனா முனையில் அந்த ஊகம் வரவில்லை. கண்களில்தான் கண்ணீர் நிறைகிறது.

கே. கே. எஸ். வீதி, கோகிலா மகேந்திரன்.
இணுவில்.
4-12-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

1) தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி நான்மணிமாலை 01

2) பொலிகண்டிக் கந்தவனநாதர் திருவிரட்டை மணிமாலை 11

3) சாத்தானை ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருவூஞ்சல் 16

4) நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான்மீது பாடிய பக்திரசக் கீர்த்தனை 20

5) மாவைச் சிலேடை வெண்பா (பிற் சேர்க்கை) 30

6) தச்சன் தோப்புச் சிந்தாமணி விநாயகர் திருவிரட்டை மணிமாலை 41

7) இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் மும்மணிக் கோவை 45

8) இணுவில் கந்தசுவாமி திருவிரட்டை மணிமாலை 52

9) இணுவில் சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை 56

10) தெல்லிப்பழை கோயிற்புலச் சிவபெருமான் திருவூஞ்சல் 60

11) கும்பழாவளை விநாயகர் திருவிரட்டை மணிமாலை. 64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி நான்மணிமாலை

## காப்பு

### நேரிசை வெண்பா

சீராருந் தெல்லிநகர் சேரேர் உழுகுடைவாழ்
தாராரும் ஸ்ரீதுர்க்கைத் தாய்மீது - நீராரும்
நற்புவியோர் வாழ்ந்திடவே நான்மணியா மாலைசொலக்
கற்பகவி நாயகரே காப்பு.

## நூல்

### நேரிசை வெண்பா

உலகந் தனையீன்ற உத்தமியே தாயே
பலகாலுன் பாதம் பணிவோம் - நிலவுலகில்
நாங்கள் படுந்துயரம் நாயகியே காண்கிலையோ
தாங்கற் கரிதே தவிர். 1

### கட்டளைக் கலித்துறை

தவிரா தொழிந்தாற் றனயர்யாம் வேறார் தமக்குரைப்போம்
அவிர்கொன் றையனுக் கறைவதுந் தாயுன் அலுவலன்றோ
புவிராய ரெம்மைப் புரக்கா தொழிந்தனர் புன்மையராய்க்
கவிராய ரானோம் தருமத்தின் செல்வி கடைக்கணியே. 2

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

கடையரே என்றொ துக்கிக்
கருணைசெய் யாது விட்டால்
அடைவதற் கிடம்வே றில்லை
அருள்புரி துர்க்கைத் தாயே
திடமுடன் வாழ்வ தற்காம்
செல்நெறி தெரிய வில்லைப்
படமுள பாம்பைப் பூணும்
பரமனாந் தேவின் தேவி. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை யாசிரியப்பா

தேவர்க் கிடர்புரி தீயன தீயோன்
மகிடா சுரனை மாய்த்தருள் புரிந்து
சுரரைக் காத்த சுந்தரி தீனரை
வருத்து மசுரரை வலிகெடுத் தழித்தே
இன்றெமைக் காத்திட எழுந்தருள் தாயே
அதர்மம் ஒழியவும் தருமம் தழைக்கவும்
நல்லவர் வாழவும் அல்லவர் மாறவும்
நாடு செழிக்கவும் நசைஇ
உன்னடி பணிவோம் உனதருள் பொழிகவே. 4

## நேரிசை வெண்பா

அருள்பொழியும் அம்மையே ஆனந்த ரூபி
கருணைக் கடலே கடிதில் - வருகைபுரி
அன்பர் படுந்துயரை ஆற்று தொடர்மரணத்
துன்பந் துடைசெய் துணை. 5

## கட்டளைக் கலித்துறை

துணையும் துயர்தவிர் தெய்வமு மித்துர்க்கா தேவியென்றே
அணையு மடியர்பல் லாயிர கோடி அவர்களைநீ
துணையில் லவராய்த் துயருற வைப்பதுன் சோதனையோ
கணைகொள் கரத்தாய் கடிதினி லேவந்து காத்திடம்மே.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

காத்திடல் படைத்த லோடு
கரந்திட லாதி யாய
மாத்திகழ் கிரியை யெல்லாம்
மறைந்துநின் றியக்கு விப்பாய்
பூத்திக ழடியாய் பொன்னே
எனத்திகழ் மேனி யன்னாய்
தீத்திறம் போக்கி யெம்மைச்
சீருடன் வாழ்விப் பாயே. 7

## நேரிசை யாசிரியப்பா

வாழ்வினைத் தருவாய் வரமருள் துர்க்கா
தேவியே உன்றன் திருவடி தொழுவோம்
தெல்லி நகரிற் சீருறும் உழுகுடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியி லமர்ந்து பணிபவர்க் கெல்லாம்
அருளைப் பொழியும் அம்மையே உன்றன்
ஆலயப் பொலிவும் அதனங்க மாய
கோபுரச் சிறப்பும் குணதிசை அமைந்த
தீர்த்தச் சிறப்பும் திருவிழாச் சிறப்பும்
வார்த்தையி லடங்கா வனப்புடன்
நேர்த்தியாய் நிலமிசை நிலவுக நெடிதே. 8

### நேரிசை வெண்பா

நிலவும் இருளும்போல் நீணிலத்திற் றோன்றி
நிலவி மறைபவைகள் நேரேம் - பலகாலும்
உன்னடியைப் போற்றும் உயர்செல்வ மேசெல்வம்
கன்னியுன் காதலம்யாம் கா. 9

### கட்டளைக் கலித்துறை

காத லொடுநின் னடியிணைத் தேடிக் கவிபுனைந்தே
ஓது மடியர் துயர்தீர்க்க வென்றும் உறுதுணையாம்
மாதுநீ யென்றே மனத்தில் நினைந்து மகிழ்வுடனே
ஓதுகின் றேமை உனதடி வைத்திடெம் உத்தமியே. 10

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

உத்தமி பாதம் போற்றி
உன்னருஞ் சிரமே போற்றி
கைத்தல மவையே போற்றி
கருதிடு படைகள் போற்றி
சித்தம திருப்பாய் போற்றி
சீர்பெறு மடிய ரான
பத்தியோர் எய்து மின்னல்
பார்த்திடர் தீர்ப்பாய் போற்றி. 11

### நேரிசை யாசிரியப்பா

போற்றியம் மாவெனப் புலம்பியே யழுத
சாற்றரும் தவத்தனாம் தகுதிகொள் ஞான
சம்பந் தனுக்குத் தாயாய் வந்து
பாலினை ஊட்டிப் பரிவினைக் காட்டி
அருள்செய் திட்ட அம்மையே நாங்கள்
அல்லும் பகலும் சொல்லொணாத் துன்பம் 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்துதல் தீர்வ தில்லையோ தாயே
தாங்கிட லரிது வந்தே
தரணியில் வாழத் தரும்வழி செய்யே. 12

## நேரிசை வெண்பா

செய்யுந் திறமறியாச் சிற்றறிவோ ராயுழல்வோர்க்
குய்யும் வழிகாட்டும் உன்னடியே – மெய்யுணர்வோ
டெந்நாளும் போற்றும் இணையிலின்பந் தந்து
பொன்னாடு சேர்க்கும் புணை. 13

## கட்டளைக் கலித்துறை

புணைவேண்டி வாடும் பொறியில மாமெங்கள் புன்மையொழித்
தணைகின்ற வாற்றை அறியச்செய் தாரருள் தான்வழங்கித்
துணையுண் டெனநாம் துணிந்திடச் செய்திடு தூயவளே
இணைகொண்ட சேவடி யாயுன் னடியை இறைஞ்சுதுமே. 14

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

இறைஞ்சிடுவோம் நன்மலர்கள் தேடியடி யேற்றி
என்றுமே வாழ்த்திடுவோம் இனியபுகழ் சாற்றி
கறைமருவு கண்டத்தான் கருதிடுமோர் பாகம்
கைக்கொண்ட கருங்குழலாய் கனதனத்தாய் செம்மை
நிறங்கொண்ட நீள்மலர்போல் நிலவுமுன்ற னடியை
நித்தியமும் நினைவில்வைத்து நெறியுடனே வாழ்ந்து
அறங்கள்பல ஆக்குவதும் காப்பதுவு முன்றன்
அருளெனவே பார்த்திருப்போம் ஆதரிப்பா யம்மா. 15

## நேரிசை யாசிரியப்பா

பாரொடு பவனம் பன்னிடு நீர்தீ
ஏருறு வான மெனுமிவை யைந்தும்
நீயே யாவாய் நிருத்தனின் பாதி
ஆன அம்மையே அகிலமும் ஈன்றாய்
படைத்தல், காத்தல் பண்புடன், அழித்தல்
மறைத்தல், அருளல் மாண்புடன் புரிவாய்
நீயுறை ஆலயம் நீசரா லழியப்
பார்த்தே இருப்பாய் பத்தர்கள் உணரார்
உன்னுளக் கருத்தை உணர்ந்திடா தடியோம்
துன்னரும் துக்க சாகரத் தழுந்தி
வேதனை உறுவோம் அம்மா
சோதனை வேண்டாம் துயரொழிப் பாயே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

வேண்டாத் துயரினையும் வேரறவே தானழிப்பாய்
வேண்டா தனபுரியும் வீணரையும் – தாண்டவஞ்செய்
அப்பன் அருகிருக்கும் அம்மா உனையன்றி
ஒப்பில் துணையார் உரை. 17

### கட்டளைக் கலித்துறை

உரைப்பா ருரைகள் பலவா யிருக்கும் அவைகளெல்லாம்
திரைப்பா லமுத மெனத்திகழ் தூயசொல் லாவனவோ
குரைப்பா ருரையெலா முன்செவிக் கேறுமோ கோமளமே
உரைப்போ மெமதிடர் தீர்த்திட வந்தருள் ஒண்ணுதலே.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஒண்ணுதற் றாயே உன்றன்
ஒப்பருங் கழல்க டம்மைக்
கண்ணினிற் கருத்தில் வைத்தே
காதலாய்ப் போற்று கின்றோம்
மண்ணினிற் குழப்பந் தோன்றி
வாழ்வினைக் கலக்கி யின்று
புண்ணினிற் பாய்வே லாயுன்
புதல்வரை வருத்தல் நன்றோ. 19

### நேரிசை யாசிரியப்பா

புதல்வரைக் காப்பாய் புன்மையைத் தீர்ப்பாய்
தவநெறி யறியாத் தனயர்யாம் உய்யும்
வழியினிற் செல்லும் வரத்தினை யருள்வாய்
பழியொடு பாவ வழியினிற் செல்லா
உயர்வழி ஒழுக உறுதுணை புரிவாய்
அம்மா தாயே அருள்மிகு துர்க்கா
தேவி யென்றே தினந்தினந் தொழுவோம்
அடியோம் படுதுயர் அகற்றிட வேண்டும்
கடிசேர் மலர்த்தாள் கருத்தினில் வைப்போம்
துடியா மிடைசேர் சுந்தரி
படிமேல் வாழும் பயன்தரு வாயே. 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

பயனை யறியாது பாவ வழிச்செல்
சுயவறிவே யற்றகொடுஞ் சூரர் - துயரிழைத்தால்
தேடித் திருவருளார்ந் தேவிதுர்க்கைத் தாயவளைக்
கூடில் இலையோர் குறை. 21

### கட்டளைக் கலித்துறை

குறைகளைத் தீரெனக் கூடிவந் தேதினம் கும்பிடுவார்
மறைமுறை நின்றிடில் மாற்றுவை அன்னவர் வல்வினைகள்
பிறையணி செஞ்சடைப் பெம்மான் விதித்த நெறியினில்லார்
அறைவன உன்செவிக் காகாவெனநா மறிந்திலமே. 22

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அறிந்தில மெனினு முன்றன்
அடியிணை மறந்தி லேமுன்
சிறந்திடு கோயில் வந்து
சேர்குவம் தொழுவம் தொண்டு
திறம்படப் புரிவம் தீயோர்
செய்திடு மநீதி கண்டு
கறங்கெனச் சுழல்வோம் காப்பாய்
கண்ணினுள் மணியாந் தாயே. 23

### நேரிசை யாசிரியப்பா

தாயே துர்க்கா தரணியில் நாமெலாம்
ஓயா தோடி உழல்கிறோம் எம்மைக்
காப்பா ரில்லைக் காத்திட வேண்டும்
கேட்பா ரில்லைக் கெடுதிகள் அதிகம்
அறமழி கிறது ஆதரிப் பாரிலை
மறநெறிச் செல்வோர் மாபெருந் தொகையினர்
காரண மின்றிக் காரியம் நிகழ்வ
தில்லெனக் கூறுவர் இணையிலா அறிஞர்
தீமைகள் விளைவதைத் தெளிவுறக் காண்கிறோம்
காரணம் யாதெனக் கருத்தினி லறியோம்
அம்மா துர்க்கா அறிவினைத் தருவாய்
இம்மா நிலத்தில் இணையிலாத் துன்பம்
எய்துதல் தீர்ப்பாய் இரங்கி
நல்குதல் வேண்டும் நன்னெறி தானே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

நன்னெறியை நாமறியோம் நாயகியே நாங்களுறும்
புன்னெறியை யேவிலக்கிப் புத்தியருள் அன்னை துர்க்கா
தேவி தரணிதனிற் சேர்வெந் துயரங்கள்
பாவியரை நாடுவதைப் பார். 25

### கட்டளைக் கலித்துறை

நாடுஞ் சுவையுற நன்கெனை நான்மணி மாலையினைப்
பாடும் பணியிற் பணித்தவ ளேபர மேஸ்வரனைக்
கூடும் கனதனக் கோமள மேயிக் குவலயத்தில்
ஓடும் நிலையை யொழித்தெமைக் காத்தாறுதலுரையே.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

உரைப்பதுன் கடமை ஒண்ணுதற் றேவி
ஓரிடந் தனில்நிலை கொள்ளோம்
நிரைப்படு துரும்பாய்த் திசையெலா மோடிச்
சீர்குலை கின்றனம் நல்ல
இருப்பிட மறியோம் இருந்துய ரிடையோம்
ஈசனின் பாதியாம் தாயே
பிரைப்படு பாலின் வெண்ணெயே யென்னப்
பிறங்குவோய் வெளிவரு வாயே. 27

### நேரிசை யாசிரியப்பா

வெளிவர வேண்டும் வெற்றியை ஈயும்
அளியுடை யம்மே அகதிக ளானோம்
ஓரிடந் தனிலு முறுதியா யிருக்க
முடியவே யில்லை முன்புசெய் பாவம்
என்ன வென்பதும் எம்மா லறிய
முடியவே யில்லை மூடரே யானோம்
உன்னை நம்பினோம் உன்னருள் வேண்டும்
அறிவினைத் தருவாய் ஆரிடர் தீர்ப்பாய்
தினந்தினம் தொழுவோம் திருவடி
சினந்தவிர்ந் தெமக்குச் சீர்தரு வாயே. 28

### நேரிசை வெண்பா

சீர்தருவாய் ஊர்தருவாய் சிற்றினங்கள் நீக்கிடுவாய்
பேர்தருவாய் பெம்மான் பெருந்தேவி - ஏருடையாய்
நல்லறிவைத் தந்திடுவாய் நல்வாழ்வைத் தந்திடுவாய்
பல்வளமுந் தந்திடுவா யே. 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைக் கலித்துறை

பல்வள முந்தந்து பாவல னாக்கியே பாரிலிடர்
இல்லெனச் செய்தே இணையடி தம்மை இதயத்திலே
நில்லெனச் செய்து நிறைவாழ்வு தந்து நிரயத்திலே
செல்லுமத் தீய நெறியினிற் செல்லா வகையருளே. 30

எழுசீர் ஆசிரிய விருத்தம்

தீநெறி தனிற்செலுமம் மால்வழி தனைப்புறமாய்த்
தீதென ஒதுக்கி நிதம்
தூநெறி தனிற்செலுமம் மேல்வழி தனிற்புகுதத்
தூயவருள் தான்பு ரிகுவாய்
தேநெறி தனிற்புகுது சீர்தனை மிகப்பெரிது
சேருனடி யார்கள் பெருமை
யார்நெறி முறைப்படவே கூறுவ ருரைப்பரிது
யாவினு முறையு மம்மே. 31

நேரிசை யாசிரியப்பா

யாவினு முறைவாய் யாவையும் படைப்பாய்
யாவையுங் காப்பாய் யாவையும் அழிப்பாய்
யாதுன் கருத்தென யாரும் அறியார்
அடியார் கருத்தி லகலா துறைவாய்
எனவே ஆரணம் இசைத்திடு மன்றோ
நல்ல அடியார் நாட்டில் இலரோ
சொல்லொணாத் துன்பம் தொடருவ தேனோ
நம்பினோர்க் கருள்புரி நாயகி யேயெம்
இடுக்கண் அகற்றி இன்னருள் புரிவாய்
தாங்கிடற் கரிது தாயே
பூங்குழல் தம்மைப் போற்றிசெய் வோமே. 32

நேரிசை வெண்பா

போற்றிடுவோம் பொன்னடியைப் பூரணியே நாங்களுறும்
சாற்றரிய பேரிடரைத் தானகற்று - தேற்றமுடன்
இப்புவியில் வாழ்ந்திடவே இன்னருளைத் தந்திடுசொல்
தப்புதற்கு யாதுவழி தான். 33

கட்டளைக் கலித்துறை

தப்புதற் காவன சார்தலில் சீரழி வானவெல்லாம்
இப்புவி மீதினில் ஒய்வுற யாரிடம் யாம்புகல்வோம்
அப்பனு மம்மையு மாகிய நீரடி யற்கிரங்கிச்
செப்புறு நல்வழி தானருள் வீரெனச் சேருவமே. 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

சேருவதும் எங்களது கடனெனினு மெமக்குச்
சிறந்தவழி காட்டுவது தேவியுன்றன் கடனே
சீருறவே வாழ்வதற்காம் செல்நெறியைக் காட்டு
செப்பமுடன் துதித்திடுவோம் சேவடியை யென்றும்
ஆருறவிங் காரயலார் ஆர்பகைவ ரென்றே
அறிந்திடவே ஆற்ற லிலோம் அம்மா நின் கருணை
கூருறவே யாம்பெறவே கும்பிடுதல் செய்வோம்
குவலயத்தில் நின்கருணை சயமகளே பொலிக. 35

## நேரிசை யாசிரியப்பா

குவலய மதிலே கூரிட ருறுவோம்
தவநெறி யறியாத் தனயரே யானோம்
சிவனை மதியாச் சிறுவிதி புரிந்த
அவயா கத்தி லவிபெறச் சென்ற
தேவர்க ளவுணராற் சீரழி வுற்ற
கதையைக் கந்த புராணங் கூறும்
நாம்படு மிடரெலாம் நமக்கேன் வந்தன
என்பதை எம்மால் அறியவே முடிய
வில்லையே யம்மா ஈசனின் பாகம்
ஆக அமர்ந்த அம்மணீ எமக்குன்
அருளினைத் தருவாய் ஆரிடர் தீர்ப்பாய்
தாயே துர்க்கா சரணம்
ஆருமற் றேமை ஆதரிப் பாயே. 36

## நேரிசை வெண்பா

ஆதரிப்பா ராருமிலர் அம்மையே நின்பதமாம்
சீதமலர் தம்மைத் தினந்தோறும் - காதலுடன்
ஏத்துவோம் யாங்களுறும் இன்னலினைப் போக்கியெமைக்
காத்திடுவ துன்றன் கடன். 37

## கட்டளைக் கலித்துறை

காத்திடு வாயெனக் காதலம் நம்பியேகை தொழுவோம்
பூத்திரள் தூவியே பொன்னடி தன்னைநாம் போற்றிடுவோம்
நாத்திக ராகிடோம் நாயகி யுன்னடி நாம்மறவோம்
தோத்திரம் செய்குவம் தூநெறியேயருள் துர்க்கையம்மே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

தோத்திரங்கள் பாடுதலும் தொண்டுபல செய்திடலும்
தூயநெறி யாளர் கொள்ளும்
நேர்த்தியென நாமுணர்ந்து நேமமிகு காதலொடு
நினதுதளி சேர்ந்து நாளும்
பூத்திரள்கள் சேர்த்திடுவோம் பொன்னடியைப்
போற்றிடுவோம்
புவிதனிலே நாங்க ளடையும்
தீத்திறங்கள் போக்கியருள் திருவடியைக் காட்டியருள்
தெல்லிநகர்த் துர்க்கை அனையே. 39

## நேரிசை யாசிரியப்பா

தெல்லி நகரிற் சிறந்து விளங்கும்
திருவுறு துர்க்கா தேவித் தாயே
நல்லன செய்வாய் அல்லன களைவாய்
நாம்படு மின்னல் நாடியே தீர்ப்பாய்
பிள்ளைகள் செய்யும் பிழையினைப் பொறுப்பாய்
தினந்தினந் தொழுவோம் திருவடி மலர்களை
மனமதி லிருத்தும் வழியினை அருள்வாய்
அறவழி ஒழுகும் அறிவினைத் தருவாய்
நாட்டில் நல்லோர் பலராய்
உன்னரு ளாலே வாழுக உலகே. 40

நான்மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

யாழ்ப்பாணத்துப் பொலிகண்டிக் கந்தவனநாதர்

# திருவிரட்டை மணிமாலை

## காப்பு

### கட்டளைக் கலித்துறை

பொலிகண்டி யென்னும் புனிதப் பதியிற் புகழுடனே
நலியு மடியரை நன்குடன் காத்திடும் நாயகன்மேல்
கலிதீர்ந் திடுதல் கருதியிரட்டையர் மாலையினை
எலிவா கனனே இனிதுறப் பாடநீ காத்தருளே.

## நூல்

### நேரிசை வெண்பா

கந்த வனப்பதியின் காவலனே சேவகனே
எந்த மிடரொழிவ தெந்நாளோ - கந்தா
கருணைக் கடலே கலிதீர்க்க ஓடி
வருவாய் தருவாய் வரம். 1

### கட்டளைக் கலித்துறை

வரந்தரு வாயென மாணடி மீது மலர்சொரிந்து
சிரந்தனைத் தாழ்த்தித் திருமுறை ஓதித் தினந்தினமும்
வருந்து மடியர்கள் மாநிலந் தன்னிற் படுதுயரை
மருந்தா யிருப்பவ ரேஒழி யாது மறைவதென்னே. 2

### நேரிசை வெண்பா

மறைகளுங் காணா மலரடியாய் தேவே
பிறையணியும் பிஞ்ஞகனின் பெட்பார் குருவே
தரைவாய்த் தமியேம் படுதுயரைப் போக்க
விரைவாய் வரவேண்டு மே. 3

### கட்டளைக் கலித்துறை

மேதினி மீது மிகப்பல நாளாய் மெலிவுறுதல்
பாதி மதிசேர் பரமன் மகனேநீ பார்த்திலையோ
சோதனை போதும் துயர்தாங்க மாட்டோம் துரிதமுடன்
வேதனை போக்கி யருள்வாய் விசாக சரவணனே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

சரவணனே சற்குருவே சார்ந்தோ முனையே
கரவாது வந்திடுவாய் காப்பாய் - புரமவைமுன்
புன்சிரிப்பாற் செற்ற புகழோன் புதல்வாநீ
என்கருதி உள்ளாய் இசை. 5

### கட்டளைக் கலித்துறை

இசையினைக் கேட்டு இதயங் குளிரு மிறையவனே
தசையினை உண்ணெனத் தான்படைத்திட்ட தலையளியன்
அசையினை முற்றத் துறந்த அரும்பெரும் ஞானியர்கள்
திசைகளி லில்லெனத் தீர்த்தனை யோமால் மருகநீயே 6

### நேரிசை வெண்பா

மால்மருகா ஓம்முருகா மாமயிலின் மீதினிலே
சேல்விழியார் தம்மோடு சேர்ந்திருப்பாய் - பால்போலும்
இன்சொல் லுமையாள் இனிதணைக்கும் பாலகனே
புன்சொல் உறாதோ செவி. 7

### கட்டளைக் கலித்துறை

செவியினைப் பெற்றுந் தினந்தொறு முன்புகழ் கேட்டறியார்
புவியில் இடர்பல பெற்றிட வேண்டியே வந்தணைந்தார்
அவியினைப் பெற்றிட அண்டிய தேவர் படுதுயர்போல்
புவியில் தமிழர் பொருந்தல் தகுமெனப் போற்றினையோ. 8

### நேரிசை வெண்பா

போற்றற் குரியவனே புன்மையெலாம் போக்கிடுவாய்
சாற்றற் குரிய சடாட்சரத்தைத் - தேற்றமுடன்
எந்நாளு மோத இனிதருள்வாய் சண்முகனே
நன்னாவில் நிற்பாய் நயந்து. 9

### கட்டளைக் கலித்துறை

நயந்தே இறைஞ்சிடும் நல்லடி யார்கள் நலிவகற்றி
அயன்தேவ ரானோர்க் கறிதற் கரிதா யமர்ந்திடுவாய்
பயந்த பதியாம் பரமனுக் கன்றொரு காற்குருவாய்
இயைந்த முருகா இருவினை யோம்துயர் போக்குகவே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

போக்கா திருந்தாற் புதல்வரா மெம்மையினி
நோக்கா ரெவர்களுமே நும்மடியே – காக்குமென
நம்பியே வந்தோ நயந்தருள்வா யானைமுகன்
தம்பியே கைதொழுவோம் கா. 11

### கட்டளைக் கலித்துறை

தொழுவார் துயர்கள் தணிப்பாயெனவே துணிவுகொண்டு
அழுதே புலம்பி அடியிணை நம்பி அருகுவந்தோம்
விழுவோம் தொழுவோம் விரைவுடன் வந்து வெளிப்படுவாய்
கழிபேருவகை கொளவே கதிதா குகமணியே. 12

### நேரிசை வெண்பா

குகமணியே கூவல்செய்யுங் கோழிக் கொடியாய்
அகமதிலே அன்பிலர்தா மென்றே – செகமதிலே
பாரா திருப்பீர் பழிசேரும் நும்மீது
தீராது தீர்ப்பீ ரிடர். 13

### கட்டளைக் கலித்துறை

இடர்தீரு மென்றே இடந்தோறு மோடி இளைத்திடுவோம்
கடல்போல் வருதுயர் கண்டிலை யோகரு ணைக்கடலே
அடல்சே ரவுணர் அமரர்க் கிழைத்த அருந்துயர்போல்
படிமே லடியோம் படுதுயர் தீர்த்திடு வாய்பரனே. 14

### நேரிசை வெண்பா

தீர்த்திடு வாரில்லைத் தீமைகளோ தான்குறையா
ஆர்த்திடு கின்ற அரக்கர்செயல் – பார்த்திலையோ
குண்டைப் பொழிகின்றார் கோடிநட்டம் செய்கின்றார்
அண்டுவது தானெங் கறை. 15

### கட்டளைக் கலித்துறை

அண்டிப் பிழைத்திட ஆறுதல் பெற்றிட ஆருளரோ
எண்டிக் கிலுந்தேடி எய்ந்தோர் மிறைவா அடிமையெனக்
கொண்டிக் கணமே குவலயத் தேநாம் நனிமகிழ்வு
கொண்டுய்ந் திடவே குதித்துமே வந்திடு கோமகனே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை வெண்பா

கோமகனே கொற்றமுறு வேற்படைகொள் நாயகனே
பூமகளின் சீர்மருகா பொற்புடைய - தேமகளாம்
கன்னியொடு வள்ளியுறக் காட்சிதரு மாமணியே
சென்னியுறச் சேர்வோம் அடி. 17

### கட்டளைக் கலித்துறை

சேர்தற் குரிய இடமெது வென்றே செகத்தறியார்
ஓர்தற் குரிய அறிவினை எய்தார் உலைவுறுவார்
சீர்பெற் றுயரச் செழுங்கழல் தான்துணை யென்றறியார்
ஊர்பற் பலவினு மோடிக் களைத்திடல் ஒய்வதென்றே. 18

### நேரிசை வெண்பா

ஓய்ந்திடவே ஓர்வழியைத் தான்தருவாய் பூரணனே
பாய்ந்துவரும் நீர்போற் பரந்ததுயர் - தேய்ந்திடவும்
உன்னடியைப் போற்றி உயர்வழியில் வாழ்ந்திடவும்
சென்னிமிசைச் சேர்த்திடுவோம் கை. 19

### கட்டளைக் கலித்துறை

கைகளைக் கூப்பித் தலையினைத் தாழ்த்தியே காசினியிற்
பொய்களை நீக்கிப் புணரிக் கரையிற் பொருந்திடுநற்
பெய்வளை யாரிரு பாலுறப் பேறுகள் தானருளும்
கையடைக் கந்த வனத்துறை நாதனைக் காண்குவமே. 20

திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மி மெட்டு

கந்தவனநாதா காருண்ய மூர்த்தியே
காசினியோர்துயர் காண்கிலையோ
மைந்தர் படுதுயர் மாற்றா திருந்திடில்
மண்ணில் யாரிடம் போயிரப்போம் 1

சிவனை மதியாத சிறுவிதி யாகத்தில்
சேர்ந்தபாவத்தினால் தேவர் நொந்தார்
அவமே அலைகிறோம் ஆர்செய்த பாவமோ
அறிந்திலோம் எம்மைநீ காத்திடுவாய் 2

ஆனைமுகமுடை ஐங்கரன் தம்பியே
ஆறுமுகத்தனே அருள்புரிவாய்
தேனைப்பழச்சுவை யாயினவென்றசொல்
தேவயானை வள்ளி நாயகனே 3

மாவின் மருகோனே மாவைத் தடிந்தோனே
மாண்புடன் உன்னடி போற்றிடுவோம்
சேலின்விழியுமை செய்ய புதல்வனே
சேயரைக் காத்திடல் வேண்டுமையா 4

அசுரர்கள் ஆற்றிய அநியாயத்தின் மேலாய்
ஆற்றுவார் கொடுமைகள் அரக்கர்போல்வார்
வசுமதி தன்னில்நாம் வாடுகிறோம் எமக்குநீர்
வாழும் வழிதனைக் காட்டிடுவீர் 5

குண்டைப் பொழிகிறார் கோயிலை அழிக்கிறார்
கும்பிடவந்தோரைக் கொல்லுகிறார்
அண்டுவ தெங்கேநாம் ஆரிடம் சொல்லுவோம்
அப்பனே காப்பது உன்கடனே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## கரணவாய் வடக்கு - சாத்தானை
## வீரபத்திர சுவாமி

# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

காப்பு

சீர்கொண்ட யாழ்ப்பாண தேசந் தன்னிற்
சிறப்பமரும் பொலிகண்டிக் கரையில் வாய்ந்து
பேர்கொண்ட கரணவாய் வடக்கில் வாழும்
பெருமானாம் வீரபத்ர சுவாமி மீது
நார்கொண்டு நற்றமிழால் ஊஞ்சல் பாட
நறுங்கொன்றைத் தார்முடியான் நம்பன் மைந்தன்
கார்கொண்ட களிற்றுமுக முடைய முன்னோன்
கமலமல ரடியிணைகள் காப்பதாமே. 1

இருக்குமுதல் நால்வேதம் தூண்க ளாக
இசையுமுப அங்கமெலாம் விட்ட மாக
அருக்கனென ஒலிகாலும் மணிக ளார்ந்த
அட்டதிக்குப் பணிகளெலாம் வடம தாகப்
பொருப்பெனவே உயர்தங்கப் பலகை சேர்த்துப்
பொலிவுபெற அமைத்திடுநல் லூஞ்சல் மீது
விருப்புடனே அமர்ந்தெங்கள் வினைகள் தீர
வீரபத்ர சுவாமியரே யாடி ரூஞ்சல். 2

ஆதவனும் அம்புலியும் கவிகை தாங்க
ஆரணனும் நாரணனும் கவரி ஓங்கச்
சீதவரிஇறை ஆல வட்டம் ஏந்தத்
திருமறவி வேத்திரங்கை தாங்கி நிற்கப்
பாதமலர் மீதுமலர் பல்லோர் தூவப்
பாரிலுளோர் துயர்தீர்க்கும் கருணை மேவ
ஏதமில்சீர்ச் சாத்தானைப் பதியில் மேவும்
எழில்வீர பத்திரரே யாடி ரூஞ்சல். 3

செம்பவளத் தம்பமிரு பாலும் நாட்டித்
திகழுமரக தத்தாலுத் தரங்கள் மாட்டி
அம்புலியோர் புகழ்வயிரக் கழிகள் நீட்டி
அவிர்படிகத் தகடுமிசை யாக மூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்புகழ் துகிலதனால் விதானங் கட்டி
ஒண்தரள வடத்தினவிர் ஊஞ்சல் மேவி
நம்பெருமான் சாத்தானைப் பதியில் வாழும்
நலவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 4

அன்பினொடு தொழுமடியார் அல்லல் நீக்கும்
ஆயிரமா முகத்திலுறும் அருட்க ணோக்கும்
இன்பமுறும் அபயமுடன் வரத மென்னும்
இங்கிதஞ்செய் திருக்கரமும் எழில்நூன் மார்பும்
மின்பயிலும் பாணியுறும் வில்லு மாகி
மெல்லியலார் பத்திரையு மொருசார் மேவத்
துன்பமகல் சாத்தானைப் பதியிலுள்ளீர்
துதிவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 5

அண்டரெனு மந்தணரா ரணங்கள் நாட
அடியவர்க ளரகரவென் றருகு கூடக்
கண்டெனவே இனியமொழி பயிலு நல்லார்
கானமயி லாமெனவே களிப்பொ டாடத்
தொண்டுபடு மன்பர்நிதம் பண்கள் பாடச்
சூதமுட னித்தியெனு மரங்களாய
தண்டலைசூழ் சாத்தானைப் பதியில் வாழும்
தகுவீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 6

குந்தமெழுப் பலகையுடன் குலிசம் சூலம்
குலவுதனு கோல்கழுமுள் கோதில் தண்டாம்
அந்தமறு படைகளெலாம் அங்கை தாங்கி
அயன்மதலை மகமழித்த ஆதி நாதா
வந்தனைசெய் அடியவர்கள் மயக்கம் போக்கும்
வரமருவு திருநோக்காய் மலைமான் மைந்தா
செந்திருவாழ் சாத்தானைப் பதியில் மேய
சீர்வீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 7

ஓங்குதலை மாலையுப வீத மாட
உறுபணியா லாம்வாகு வலய மாடத்
தேங்குநதி பிறையினொடு சடையு மாடத்
திருநுதன்மேல் ஒளிர்நயனந் தேசோ டாடப்
பாங்குருறு மடியவர்கள் களியோ டாடப்
பரிவினொடு மரம்பையர்கள் நடனமாட
வீங்குபுகழ்ச் சாத்தானைப் பதியில் மேய
விறல்வீர பத்திரரே யாடீ ரூஞ்சல். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிரமாம் வடிவுடையீர் ஆடீ ரூஞ்சல்
உமையம்மை பாலகரே ஆடீ ரூஞ்சல்
முக்கண்கள் உடையவரே ஆடீ ரூஞ்சல்
முன்னோனுக் கிளையவரே ஆடீ ரூஞ்சல்
தக்கசிம்புள் ஆனவரே ஆடீ ரூஞ்சல்
தலைமாலை தனையுடையீ ராடீ ரூஞ்சல்
மிக்கபுகழ்ச் சாத்தானைப் பதியி லென்றும்
விரும்பியுறை நாயகரே யாடீ ரூஞ்சல். 9

நான்மறைகள் ஆகமங்கள் நாளும் வாழி
நல்லதிரு முறைபத்தோ டிரண்டும் வாழி
வான்முகில்கள் மழைபொழிந்து நாடு வாழி
மடமகளிர் கற்புநெறி மன்னி வாழி
சான்மருவும் உழவர்தொழில் சால வாழி
தண்மைமிகு சாத்தானைப் பதியோர் வாழி
தேன்மருவு கொன்றைமலர் வேணியண்ணல்
சேய்வீர பத்திரரும் வாழி! வாழி! 10

## எச்சரிக்கை

கரணவாய் வடக்கிலுறை கர்த்தா எச்சரிக்கை
கருதிடும் சாத்தானைப் பதியா யெச்சரிக்கை
பரவிடும் பத்திரையோ டுறைவா யெச்சரிக்கை
ன்புடன் வணங்குபவர்க் கருள்வா யெச்சரிக்கை 1

ஆயிரத் திரட்டிகொண்ட தோளா யெச்சரிக்கை
அடியவர் துயர்போக்கி ஆள்வா யெச்சரிக்கை
சேயெனும் முருகனுக்கு முன்னா வெச்சரிக்கை
திகழ்ந்திடுங் கணபதிக்குப் பின்னா வெச்சரிக்கை 2

சந்திரனைத் தேய்த்திட்ட சரணா வெச்சரிக்கை
சால்புடைய சூரியன்பல் தகர்த்தா யெச்சரிக்கை
இந்திரனை இயமனுடன் தடிந்தா யெச்சரிக்கை
எழுநாவு மக்கினிக்குச் சிதைத்தா யெச்சரிக்கை 3

அரிதுணையின் நாசியினை அரிந்தா யெச்சரிக்கை
அயன்துணைவி நாசியையும் அரிந்தா யெச்சரிக்கை
வருணனொடு வாயுவையும் வதைத்தா யெச்சரிக்கை
மறலியையும் மாய்த்திட்ட மன்னா வெச்சரிக்கை. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

சீர்மருவும் உமையீன்ற செல்வா பராக்கு
திங்கள்பணி கங்கையணி தேவே பராக்கு
பார்வெருவு வானிலகு பாணீ பராக்கு
பங்கயன்சேய் சிரமறுத்த பகவா பராக்கு

அருட்கண்கள் மூன்றுடைய அரனே பராக்கு
ஆயிரமா முகங்கொண்ட அமலா பராக்கு
அருக்கனெனத் திகழ்மேனி ஆதீ பராக்கு
அன்பினொடு தொழுமடியார்க் கருள்வாய் பராக்கு.

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - நித்தியசுப
மங்களம் மங்களம் மங்களம்.

சிவபெருமான் மைந்தருக்குச்
செக்கர் நிற முடையவர்க்கு
அவயாக மழித் தவற்கு
அருள்புரியும் நாதருக்குத்
தவம் புரிவோர் தங்களுக்குத்
தானருளும் நாயகர்க்கு - மங்களம்

நெற்றி நாட்டம் உடையவர்க்கு
நீறுதனை யணிந்தவர்க்கு
வெற்றிகொண்ட வீரர்க்குப
வீதமணி மார்பருக்குச்
சுற்றமெலாம் பூதமாய
சுத்தசிவ மாயவர்க்கு - மங்களம்

பத்திரையைப் பாகமதில்
வைத்திருக்கும் நாயகர்க்கு
நித்தியமும் சரணவாய்
வடக்கிலுறை நிர்மலர்க்கு
உத்தமர்வாழ் சாத்தானைப்
பதியிலுறை உண்மையர்க்கு - மங்களம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கீரிமலை

## நகுலாம்பிகாதேவி சமேத நகுலேசுவரப் பெருமான்மீது பாடிய

# பத்திரசக் கீர்த்தனைகள்

இராகம்: சிந்துபைரவி தாளம்: ரூபகம்

பல்லவி

நகுல கிரிக்குநாம் நேராய் நம்பனைக்
காணப் போவோம் எல்லாம் வாருங்கள்
நேராய்ச் சீராய் —(நகு)

அநுபல்லவி

பிறந்து வளர்ந் தென்ன பயன்
பணிந்திடும் பரன்பதம் —(நகு)
உண்டு உடுத்து வாழ்ந் தோம்
ஊமர்களா கத்திரிந்தோம் —(நகு)
அன்புடன் அடியர் புகழ்ந்து மகிழ்ந்து
இன்புடன் தினம் இறைஞ்சி ஏத்தும் —(நகு)

சரணம்

நகுலமுனிவரும் நன்முசுகுந்தனும்
நளமகாராசனும் நல்லவில்விசயனும்
தொழுதிடவந்தனர் துயரெலாம்தீர்ந்தனர்
பழுதிலைஇப்பதிப் பெருமைசொலப்போமோ

மாருதப் பிரவல்லி வந்தாள்
மாமுகந் தன்னையே தீர்த்தாள்
மன்னனாம் இராமனும் வந்து
மாசெலாம் நீங்கியே சென்றான்
சோருத லின்றியே நீவிர்
தொழுதுமே நன்மை பெறுவீர். —(நகு) (1)

இராகம்: தோடி தாளம்: ஆதி

பல்லவி

தாயே நகுலாம்பிகா தேவிஉனைத் துதித்தேன்
நாயேன் கடைத்தேறிட நீயே யருள்புரிவாய் —(தாயே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

அம்மையேகேட் டருள்என்றன்
வெம்மையான வல்வினைகள்
தம்மையேயழித் தருள்வாய்
மும்மையுந் துணை செய்குவாய் —(தாயே)

சரணம்

காலினிற் சிலம்பலம்பக்
கைவளைகுலுங்க முத்து
மாலைகளசைய என்முன்
வந்திடுவாய் அம்மையே
பாலனன்று கூவியழைத்தான்
அழைத்த வுடன்
பாலைக் கேட்கிறானென்று
வாயிற்பால் கொடுத்தாயே
பாலின் இனியமொழிப்
பார்ப்பதியே உன்னையே
சாலவும் பணிந்துநின்றேன்
சரணம் சரணமம்மா; —(தாயே) 2

இராகம்: சக்கரவாகம் தாளம்: ரூபகம்

பல்லவி

ஈசனடி யேனுக் கிரங்க
இன்னுந் தாமதமா
பசுபதி யாகிய —(ஈச)

அநுபல்லவி

நகுலகிரியில் வாசனே நமதீசனே
நாரிபாகனே நடராசனே —(ஈச)

சரணம்

புல்புழுவாதி மனிதரீறாய்ப்
புக்கபிறவிக் களவுமில்லையே
எல்லையில்லா உலகஆசை
எள்ளளவேனும் ஒழியுதில்லையே
வல்லமறலி தூதர்வந்தால்மனக்
கலக்கமற்றிருக்க வழியுமில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரனையெரித்த விழியோய்
மறலியையுதைத்த கழலோய்
தாரினையணிந்த முடியோய்
சஞ்சலந்தீர்த் தருள்புரிவாய்: — (ஈச) (3)

இராகம்; கேதாரம் தாளம்: ஆதி

பல்லவி

சகல லோக மாதாவே சரணம் தாயே
சஞ்சலம் தீர்த்தருள்வாயே அம்மா —(சகல)

அநுபல்லவி

இகமும் பரமும் நல்லசுகமளித் தருளுவாய்
எங்கள் துயரமெல்லாம் இறங்கிட வேசெய்வாய் —(சகல)

சரணம்

அறம்பொருள் இன்பமும் ஆண்மையும் ஆயுளும்
திரும்பிடா ஞானமும் சேர்ந்து புகழ்பரந்து
புறங்கொடா வீரராய்ப் புகழுடைத் தீரராய்ப்
புனிதசேவை புரியப்புண்யம் அளித்தருள்வாய். —(சகல) (4)

இராகம்: சுத்ததன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

அரியும் அயனும் அடிமுடி தேடி
அறியவொண் ணாத அப்பனே யீசா —(அரி)

அநுபல்லவி

நகுல கிரியில் நயந்தே உறையும்
நம்பனே எம்மை நன்குகாத் தருள்வீர் —(அரி)

சரணம்

அன்புடன் பூசைகள் ஆற்றிடு வோர்கள்
அநுதினமும் அடி பணிந்திடு வோர்கள்
ஆலயந் தன்னை அலகிடு வோர்கள்
சிலர் யாவர்க்கும் சிறப்பளிப் பீரே —(அரி)

திருப்பணி செய்யும் சிந்தை கொண்டோர்கள்
தீர்த்த மாடியே தரிசனை செய்வோர்
திருவிழாச் செய்யும் செம்மை யாளர்கள்
பெருமை பெற்றிடப் பேரருள் புரிவீர். —(அரி) (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: சங்கராபரணம் தாளம்: திஸ்ர ஏகம்

பல்லவி

நகுலாம்பிகா தேவியே
நயந்தோமுனை மேவியே —(நகு)

அநுபல்லவி

நித்த மன்புசெய் குணத்தினர்க் கருள்
அளித்து மேவுந் தாயே
உத்தமர் மனத்தில் வாழ்வாய் நீயே
அம்மையே —(நகு)

சரணம்

எங்க ளாருயிரைச் சங்கையின்றி நிதம்
பங்க மின்றிக் காப்பாய் உலகு
எங்கு மான அம்மா! எமக்குப்பேர்
இன்பந் தாரு மம்மா! தாயே! —(நகு) (6)

இராகம்: வசந்தா தாளம்: ஆதி

பல்லவி

ஐயா என்னைப் பார்த்தருளே நான்
அஞ்சினனே உனைக் கெஞ்சினனே —(ஐயா)

அநுபல்லவி

பொய்யாம் வாழ்வில் நான் அழுந்தாமல்
போகாதிகளிலென் மனம் பதியாமல் —(ஐயா)

சரணம்

அரைநிமிஷமு முனதடி மறவாமல்
ஆக்கமழியினுமுன் அருள் துறவாமல்
கரையிலா இடர்வந்து கதிகலங்காமல்
கழியுறு பழியொடு நானிறவாமல் —(ஐயா) (7)

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

உனைமறந் திருப்பேனோ ஈசா —(உனை)

அநுபல்லவி

எதைமறந் தாலும்நின் திருவடி மலரினை
என்றும் மறவேனே தேவாதிதேவா —(உனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

அம்மையும் நீயே அப்பனும் நீயே
ஆண்டருள் புரியும் அண்ணலும் நீயே
செம்மை யாகவே திருநடம் புரிந்திடும்
சிவபெரு மானே திருவருள் தாராய். —(உனை) 8

இராகம்: தோடி தாளம்: கண்ட சாப்பு

பல்லவி

நகுலமலை யுறைசிவசிவா நாயேன் சரண்
நாடிவந் தேபணிந்தேன் அருள்வாய் நன்மைபெறவே
—(நகு)

அநுபல்லவி

பணியும் இளமதியு மொன்றாய்
அணியுஞ் சடை முடியுடையீர்
அறுமுகனும் ஐங்கரனும்
அருகிருந்தே அருள்புரிய — (நகு)

சரணம்

துள்ளிவிளை யாடிவரும் தோகைமயில் பாகா
புள்ளிமறி யேந்திவரும் பூதகண நாதா
அள்ளியிரு கண்பருகும் அன்பர்புகழ் ஈசா
வெள்ளிமலை போல்விளங்கும் வீரவிடை யாளா. —(நகு) 9

இராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

பராமுக மேனம்மா அடிமையிடம் —(பரா)

அநுபல்லவி

சுராசுரர் பணியும் தூயவளே தாயே
பராபரனின் வாமபாகத் தமர்ந்தவளே —(பரா)

சரணம்

பிறவிக் கடலின்கரை தாண்டிட நீயருள்செய்
அறவழியில் நடக்கும் ஆர்வத்தை யீந்தருள்செய்
புறச்சம யமெனும் பாழ் நெறிக்கண்
வீழாமலே யருள்தாராய் நகுலாம்பிகா —(பரா) 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

தேவியைத் துதிசெய்வாய் மனமே
தீருமுன் பயமெல்லாம் நகுலாம்பிகா —(தேவி)

அநுபல்லவி

மூவுலகிற்கும் அவளே முதன் மாதா
முழுமையா மன்புடன் தினந்தினந் தவறாமல் —(தேவி)

சரணம்

பூவிலயனும் திரு மாலுடன் இந்திரனும்
போற்றிடுவார் தினமும் சூடிடுவார் பதம்
பூவையர் கலைமகள் அலைமகள் ஆதியோர்
புகழக் கொலுவிருக்கும் புண்ணிய சொரூபியை --(தேவி) 11

இராகம்: அடானா தாளம்: ஆதி

பல்லவி

நீயருளா யெனிற்கதி யேது — அம்மா
நீலகண்டன் பாகத்துறை -- உமா —(நீயரு)

அநுபல்லவி

தாயிரங் காவிடில் நாம்உயிர் வாழ்வமோ
சகல உயிர்கட்கும் நீ தாயல்லவோ அம்மா! —(நீயரு)

சரணம்

பருவத ராசன் பெற்ற ஒருமணியே
பசுபதி பாகங் கொண்ட திருமணியே
பாவலர் நாவலர் பாடியே பணிந்திடப்
பாக்ய மெல்லா மீந்தருள் பராபரியே. —(அம்மா நீ) 12

இராகம்: சரஸ்வதி தாளம்: ஆதி

பல்லவி

திரு வருள்புரி அம்பிகையே அடியேனிடம்
தேடி வரும்வினைகள் ஓடியொழிந்திடவே —(திரு)

அநுபல்லவி

மருள்மயமாம்புவி மீதினிலே .. உன்றன்
மலரடியலதொரு துணையறியேன் —(திரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

ஓங்கார ரூபன் அறுமா முகன்
உளம்மகிழ் மாதா உலக மாதா
நீங்கா தெனதுமனக் கோயிலின் கண்ணே
நீஎன்றும் நிலைநின்று இன்பம் தாதா. (திரு) (13)

இராகம்: வாசஸ்பதி தாளம்: ஆதி

பல்லவி

நாடு போற்றிடும் நகுலேஸ்வரா
நாம் படும்பாடு தீர்வதில்லையா —(நாடு)

அநுபல்லவி

நகுலாம்பிகா தேவிபாகனே
நயந்தேமதி சூடியதேனோ —(நாடு)

சரணம்

கொடியநஞ்சை யுண்ட கொள்கைஏதோ
அடிமுடி யறியா ஆதிநாயகா
படியிலே துயரெலாம் பறந்தேபோகக்
கடிதினில் அருள்வாய் கருணாகரா. —(நாடு) (14)

இராகம்: கமாஸ் தாளம்: ரூபகம்

பல்லவி

நகுலதேவியே எல்லாஉலக அன்னையே அம்பா! —(நகு)

அநுபல்லவி

உலகம் யாவையும் நன்குபடைக்கும் நான்முகன்
காத்திடு மாலோன் அழித்திடு மரன்
யாவும் நீயன்றோ அம்பா —(நகு)

சரணம்

மலையரசன் மகளாய் வந்தாய் மாலைசூட்டினாய்
தலைமைபெற்ற தக்கனுக்கோர் தாட்சாயணியானாய்
வலிமையற்று நாமிங்கு வாடிறோ மம்மே
வந்து நின்னருள் தந்து எங்களை
வாழவைத்திடாய் அம்பா. —(நகு) (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

சுவாமிதுணை புரிவாய் என்றென்றும்
நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர —(சுவாமி)

அநுபல்லவி

பொய்யா முலகிலே போகங்களி லாழ்ந்தேன்
ஐயாநான் செய்பிழை மெய்யாகவே பொறுத்துச்
—(சுவாமி)

சரணம்

இன்பமுந் துன்பமும் இயைந்திருக்கு முலகில்
இன்பத்திலும் பொல்லாத் துன்பமே யதிகமாம்
தோன்றலும் மறைதலும் சொல்லொணாத் துன்பமே
தோன்றுதலை யொழித்துத் துயரெலாம் தீர்த்தருள்
—(சுவாமி) (16)

இராகம்: குந்தலவராளி தாளம்: ஆதி

பல்லவி

உன்னை நினைக்க அருள்தா
எந்நேரமும் —(உன்னை)

அநுபல்லவி

மண்ணைப் பெறவிழைந்து மாதரையும் தாம்விழைந்து
பொன்னைப் பெறமுனைந்து புத்தியுங் கலங்கிடாமல்
—(உன்னை)

சரணம்

ஈழநாட்டினில் விளங்கும் எழில்சேர் நகுலாசலம்
சோழநாட்டினில் விளங்கும் தூயசிதம்பரம் ஒக்கும்
பாழும்மனிதர் எண்ணார் பார்ப்பர் வயிற்றைநிரப்ப
வாழவகை யறியார் வையகமும் உய்ந்திடவே.
—(உன்னை) (17)

இராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

இந்தவர மருள்வாய் நாங்கள்
சொந்தமண்ணின்றியே சிந்தைவருந்துறோம்
—(இந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

சுந்தரியாகத் துலங்கிடும் அம்மையே
சத்ததமும்புவி தாங்கிடும் ஈஸ்வரி —(இந்த)

சரணம்

வீடிலா தவரெல்லாம் வீடுகள் பெறுகிறார்
நாடிலா தவர்களும் நாடு பெறுகிறார்
பீடிலா தவர்கள்போற் பேதுறுகின் றோம்நாம்
பாடிடும் எம்மையே பண்புடன் காத்தருள் —(இந்த)
பாரினிற் பாலகர் மாதருஞ் சாகிறார்
மாரகர் குண்டினால் வயோதிபர் மாள்கிறார்
சீரழிவினை யெல்லாம் செய்திடல் என்னையோ
பூரணி எம்மைநீ புறக்கணிக் கின்றாயோ. —(இந்த) 18

இராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

பல்லவி

அருள்புரிவாய் நகுலேஸ்வரனே
அடியவரெல்லாம் உன்னடிபெறவே —(அருள்)

அநுபல்லவி

பரிபூர ணனே பரமேஸ் வரனே
பக்தர்க் கருளும் பண்புடை யோனே —(அருள்)

சரணம்

கருணா கரனே கருணை புரிவாய்
காத்திட வேண்டும் கடவுள் மாமணியே
தருமம் தழைக்கவும் அதர்மம் ஒழியவும்
தாரணி தன்னிலே போரணி நீங்கவும் —(அருள்) 19

இராகம்: அரிகாம்போதி தாளம்: ரூபகம்

பல்லவி

வண்டாடும் கீரிமலையிற் கண்டேன்உன்மேற்
கொண்டேன் அன்பு —(வண்)

அநுபல்லவி

கொண்டல் போலும் கண்ட முடையான்
கொன்றை வேந்தன் பாகங் கொண்டாய் —(வண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

பாதத் தாமரைகள் கண்டே
பாரினிலுனைப் போற்ற வந்தேன்
மாதவம் யான் செய்யேனென்று
மறைந்து நின்று சோதியாதே —(வண்)
பாதிப் பிறையைச் சூடிடும்பரன்
பாகங் கொண்ட பார்ப்பதியே
ஆதியோடு அந்த மில்லாய்
ஆரணப் பொருளே உன்னை —(வண்) 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைச் சிலேடை வெண்பா

பிற்சேர்க்கை

வேதியர்க டம்மகத்தும் வேய்ங்குழலர் தம்மகத்துங்
கீதவொலி மாண்புமிகு மாவையே - ஓதிடுநல்
லாறக் கரத்த னரிசேயின் கர்வமதை
மாறக் கரத்த னகம். 1

கார்வடியர் தம்மிடையுங் காரிகையர் தம்மிடையும்
பூவனைய பட்டுமிளிர் மாவையே - தாவும்
மயில்வா கனத்தர் மலரடிகள் போற்று
மயில்வா கனத்த ரிடம். 2

பஞ்சரதங் காண்பவரும் பாடுநரைக் காண்பவரும்
நெஞ்சுருகி நிற்குமெழில் மாவையே - பஞ்சார்
பதம்போற்று வார்தம் பவவினைகள் மாற்றும்
நிதம்போற்று வார்தம் நிலை. 3

மாவிளக்குப் போடுநரு மாவினையை நீக்குநருங்
கோவிலதை நாடிடுவார் கும்பிடுவார் - மாவை
அரிந்தா னுவந்தே அமர்ந்திடுநல் மாவை
தெரிந்தே சிறந்தார் தினம். 4

பூசனைகள் செய்பவரும் புண்ணியங்கள் செய்பவரும்
மாசறவே வாழுமணி மாவையே - தேசார்
அரனார் குமாரன் அருள்முருக னென்று
மறனார்க்கு மாரன் இடம். 5

கார்த்திகையான் பாதமவை காத்திடுமே நம்மையெலாம்
கீர்த்தியுடன் வாழ்ந்திடலாங் கேடில்லை - சீர்த்தி
குறையா அடியார் குகன்போற்று மாவை
குறையார் அடியார் பெறார். 6

மந்திரங்க ளோதுநரு மாலைவகை யாக்குநரும்
வந்தனைக ளாற்றுதனி மாவையே - நொந்தே
மனமழிவார் தேனிப்பார் மாண்புடனே பாடித்
தினமழுவர் தேனிப்பார் தேறு. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா தருக்கள் ளரசா னவள்கோயில்
அம்மா தருக்கள் அழகுசெய் - நன்மாவை
சாரும் பரவும் சரவணன் றாள்வணங்கச்
சாரும் பரும்வருவா ரே. 8

முத்தமிழால் வைதவர்க்கும் மோட்சமது தானளிக்குஞ்
சித்தமுறு தேவனவன் சீர்மாவை - எத்திசையும்
பக்தியுடன் பாடுபவர் பைந்தமிழோ டாடுபவர்
பத்திதனைப் பார்க்கு மிடம். 9

அங்கம் நிலத்தடைய ஆலயத்தைச் சூழ்ந்திடுவார்
அங்கம் மலம்போக்கு மார்மாவை - துங்க
அடியவரைச் சேர்வார் அநுதினமும் போற்றா
மடியரினைச் சேரார் வசம். 10

தேரணியி னுச்சியிலுந் தேபூசை தன்னிலுஞ்சீர்
வாரணங்க டாம்விளங்கு மாவையே - தேரின்
வேதமதை யோதுநரும் வீரலிசை யாளருமாய்ப்
பாதமதைப் போற்றிடுவார் பார். 11

ஆனைமுகன் றம்பியரா மாறுமுகன் றான்விரும்பு
மானையுடன் மானையுமே யாம்பணிவோம் - மாவை
முருகன் கழல்பணிவார் மூதறிவு பெற்று
முருகன் படைவர்ர் முறை. 12

மன்சேர்வ னந்தனிலும் மாண்புறுமில் வாழ்வினிலும்
பொன்சேர் மதலைவளர் பொற்புமிகு - மின்சேரும்
மாவை நகரடைவார் மாண்புறுவார் நல்லருள்செய்
தேவை அடைவார் தெரி. 13

பெரியமனத் துள்ளார் பெருமரபில் வந்தோர்
பெரியமனத் துள்ளார் பிரானைத் - திருமாவை
வந்திப்பார் வாழ்த்துவார் வையகமெல் லாமுய்ய
வந்திப்பீர் வாழ்த்துவீ ரே. 14

கருங்கற் றிருப்பணியை மாவைதனிற் கண்ட
பெருங்கொள்கை யர்ளன் பெயரன் - பெருங்கீர்த்திச்
சண்முகநா தக்குருக்கள் சண்முகநா தன்பாதம்
எண்ணிப் பணிவா ரினிது. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலைச் சாரலினுங் கீழார் கிணற்றினிலும்
வாரிசேர் வள்ளன்மை காண்குவமால் - தேரின்மெய்
ஆறு முகத்தா னருள்புரியு மாவையே
தேறும் புவியீர் திடம். 16

ஆலயமுங் கோபுரமு மானசுவர்ச் சித்திரமு
மாலயஞ்செய் மாவை யமர்முருகன் - சால
அருள்புரிவா னுங்களுக்கே யையுறவேண் டாதே
தெருள்வீர் பணிமின் தினம். 17

வெள்ளிக் கொடித்தம்பம் வேண்டிடுவார்க் கீயுமருள்
கொள்ளை யழகுதரும் கும்பிடுவீர் - கிள்ளை
மொழிபேசு மாதர் முறையிடுநல் மாவை
வழியேகும் மாதர் தரும். 18

வெள்ளிக் கிழமை விரதமநுட் டிப்பவர்கள்
வெள்ளி விடையாள் விறல்சேயின் - கள்ளமிலா
நல்லருளைப் பெற்றிடுவார் நானிலத்தே யாமுகின்ற
புல்லரிதைப் போற்றார் புகல். 19

மதிதோறுங் கார்த்திகையில் மாவையிலே சென்று
மதியை யொருமுகமாய்த் தானிறுத்தி - மாகஇசேர்
சிந்தனையி னோடு சிவன்மகனா ரைப்பணியின்
சிந்துமே தீவினைக டாம். 20

கந்தசஷ்டி காலமதிற் கந்தனையே தானுன்னிக்
கந்தாசு கந்தாவென் றேத்துவார் - பந்தமற்று
மாவை முருகன் மலரடிக டானடைவார்
மாவை யகலார் மதி. 21

ஆனை முகத்தா னநுசரணை யால்வள்ளி
மானை யணைவார் மலரடிகள் — தேமாவை
வந்திப்பீர் போற்றுவீர் மாவுடனே தேமளித்துச்
சிந்திப்பீர் சேருவீர் மேல். 22

கோழிக் கொடியுடையான் கொற்றமயி லேறிடுவான்
ஆழிப் படையா னருமருகன் — நாளிணைகள்
சுந்தர மாவையிலே தூயமனத் தானிணைவார்
சுந்தர மாவார் சுகம். 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிக் குமாரன் குரைகழல்க டாமணைவார்
அறிஞ்சிக் குமாரன் அணையார் - பெறுஞ்சீர்
அனைத்தும் பெறுவா ரணைந்திடுவீர் - மாவை
தினைத் துணைசந் தேகம்வேண் டாம். 24

ஓங்காரத் துட்பொருளை யோராத மான்மகனை
ஆங்காரந் தீர்த்தே யருள்புரிந்தான் - நீங்காத
எம்மகந்தை மாற்ற வினிதமர்ந்தான் மாவையிலே
செம்மகந்தை செய்வீர் சிறப்பு. 25

கொக்கின் குழாங்கள் குழுமும் குளங்களுடன்
கொக்கின் னுறுசோலை கூடுமோர் - தக்கபேர்
மாவை நகரடைவீர் மாண்புறுவீர் நல்லவொரு
தேவை வணங்கும் தெளிந்து. 26

ஆறு முகப்பெருமான் ஆடிவருங் காட்சியது
கூறுந் தகைத்தோ குவலயத்தீர் - தேறிடுநல்
அஞ்சார் தினமாவை ஆறுமுகன் காண்பவர்கள்
அஞ்சாரே கூற்றுவனைப் பார்த்து. 27

பூஞ்சப் பரத்தின் பொலிவுதனைக் காண்பவர்கள்
தாஞ்சற் றயர்ந்தே தரித்திடுவார் - போஞ்சற்று
மண்ணாசை கொண்டு மயங்காதீர் மாவைசென்று
மண்ணாசைப் போக்கு மதித்து. 28

மாகநேர் மந்திரத்தும் மாஞ்சோலை தன்னிடத்துஞ்
சேகரஞ் சேர்ந்திலங்கு சீர்மாவை - பூகம்
கதலியுடன் தோரணங்கள் காண்பவர்க்கு நல்ல
பதலிதரும் பண்புளதாம் பார். 29

தேரின் வனப்புந் திகழ்முருகன் றன்வனப்பும்
யாரின் மனத்தையுந்தம் பாலிழுக்குந் - தேரின்
அணிமாவை காண்போ ரவனருளைப் பெற்று
அணிமாவை யெய்துவா ரே. 30

ஐயம் இடுவோரும் ஐயமறக் கற்றோரும்
மெய்யா யுறையுமிட மாமாவை - துய்ய
அரியின் மருகன் ஆனைமுகன் பின்னோன்
பரிவா யுறையுமிடம் பார். 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காராளர் தம்மனையுங் காசுடையோர் தம்மனையும்
ஏர்தா னிலங்கு மொருமாவை - பாரோர்
பணியும் பதத்தான் பழநியென அன்பர்
அணியும் அரத்தான் அகம். 32

அரியின் மருகன் அரிவா கனத்தி
பரியுங் குமரன் பரிவாய் - மருவும்
திருமாவை சேர்மின் தினந்தோறு முங்கள்
வருமா வினைநீக்க வே. 33

மதிசேர் முடியான் மகன்மாவை நல்ல
மதியோ டணைமின் பணிமின் - மதியில்லா
மாவாகா தேநினைமின் மாவரங்க ளீந்தருளும்
தேவாதி தேவனவ னே. 34

பூக்கொண் டணைமின் புனிததல மாமாவை
நாக்கொண்டு போற்றிடுவீர் நானிலத்தீர் - பூக்கொண்ட
ஈசன் குமரன் இருபிறப்போர் போற்றிடுநற்
றேசன் அவனே தெரி. 35

திருசேரும் மார்பன் திருமருகன் மாவை
பெருகார்வத் தேர்டும் பெயர்மின் - உருவாரும்
வேலோன் பதம்பணிவீர் வெற்றியெலாம் பெற்றிடலாம்
மாவேன் அடைந்தீர் மனத்து 36

கரியின் முகத்தன் கணபதியின் பின்னோன்
அரியின் மருகன் அருளைப் - புரிய
மருவுந் தலமாவை வந்தணைமின் என்றும்
வருமிந் திரரே கரி. 37

கடிசேர் கடப்ப மலர்மாலை மார்பன்
கடிசேர் அயிலோன் கரந்தே - படிதனிலே
காத்திடு நன்மாவை கண்டே வணங்கிடவே
பூத்திரளோ டேகுவீ ரே. 38

மாலின் முகந்தீர்ந்த மாமன்னன் புத்திரியால்
மாநிலத்தார்க் காயமைந்த ஆலயஞ்சேர் - மாவைதனை
வந்தணைமின் ஏத்திடுமின் வாயார உங்களது
பந்தமது போக்கிடலா மே. 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பார்கள் தம்மகத்தும் காமருறு பூவகத்தும்
பொற்புடைய ஏடுறுநற் பொன்மாவை - கற்பாரும்
மங்கையர்கள் தாம்வணங்க வந்திடுவார் நீவிரெலாம்
சங்கையின்றி வந்திடுவீ ரே. 40

பாத கமலம் பணிந்தேத்தி வந்திடிலோ
பாத கமலம் பறந்தோடும் - ஓதரிய
பொன்மாவை சேர்மின் புகழ்பாடி வாழ்ந்திடுமின்
நன்மா மனிதரா வீர். 41

மாடு வளர்ப்பவர்கள் மாடடையும் மாவைதனைப்
பீடு பெறவே பொருந்திடுமின் - தேடரிய
வீடு பெறவே விரும்பின் விரைந்தடியைப்
பாடிப் பரவும் பணிந்து. 42

நீராரும் பொய்கையிலும் நீள்வலியோர் மெய்யினிலும்
பேராரும் அம்புயஞ்சேர் மாவையே – சீராரும்
வள்ளி மணாளன் வடிவேற் கரமுடையோன்
புள்ளி மயிலோ னகம். 43

கண்ணிறைந்த பூவகையும் கண்ணிறைந்த காட்சிகளும்
உண்ணிறைந்த அன்புதரு மூர்மாவை - எண்ணில்
அரனார் புதல்வன் அறுமுகவன் ஆனைத்
தரனார் அனுசன் தலம். 44

ஆழிப் படையான் அருமருகன் ஆறுமுகன்
ஆழி யருகா வமர்மாவை - சூழின்சேர்
துன்பமெலா மோடிடுமே தூயவர்க ளாய்விடுவீர்
இன்பமெலா மெய்திடலா மே. 45

மாலின் னருமருகன் மால்மாவை வாழ்முருகன்
வேலோன் விசாகன் விரைசேரு - மால்கடப்பன்
பொன்னடியைப் போற்றிடவே போந்திடுவீர் மாவைக்கே
இன்னலெலா மேகுமினி தே. 46

வேலை வணங்குவதே வேலையாய்க் கொண்டிடுவீர்
மேலை வினைகளுமை மேலிடுமோ - சீலஞ்சேர்
மாவை முருகன் மரையடியைத் தான்பணிவோர்
தேவ பதமடைவா ரே. 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை பெறுதற்காய் ஆசையெலாம் சென்றிடுவார்
ஆசை பெரிதா யலைந்துலைவார் - மாசுதனைப்
போக்கும் வழிதேடார் பொன்முருகன் வாழ்மாவை
நாக்கொண்டு போற்றார் நரர். 48

அரம்பைமலி மாவை அரம்பையர்கள் வந்தே
சிரந்தாழ்த்திக் கும்பிடுவர் சீர்சால் - வரம்பெறவே
வேண்டின் விரையும் விருதுடையோ னன்மாவை
பூண்டவன்பி னோடே புக. 49

மாதர்கொள் மாதரெலாம் போற்றிடு மாவைதனைப்
பூதல மீதினில்வாழ் புண்ணியரே - ஏதமறச்
சேர்ந்தே பணிந்து சிறப்புறுவீர் நல்வழியைத்
தேர்ந்தே புரிவீர் திடம். 50

வேம்பா லரசு வியன்தருக்கள் தாமெல்லாம்
தேம்பா துயர்ந்துவளர் சீர்மாவை - ஓம்பாதே
வாழ்தல் மதியீனம் வானவர்கள் தம்மரசைத்
தாழ்வீர் சகத்தீர் சரண். 51

விதிசெய் விதியை விலக்க வழியுண்டோ
பதியாம் முருகன் பதியை - நிதியாய்க்
கொளாமல் அலையும் குவலயத்தீர் மாவை
தொழாமல் துயர்போகு மோ. 52

வடிவேல் முருகனவன் வாழ்மாவை தன்னை
வடிகொள் மனத்தோ டணைமின் - பிடியாம்
நடையார் இருவருக்கு நாயகராம் நம்பெருமான்
படையே எமக்குப் பரம். 53

அத்தி முகத்தோ னனுசன் அறுமுகவன்
அத்தி யருகா வமர்மாவை - பத்தியுடன்
செல்வீர் சிரத்தையுடன் சீரடிகள் தாம்பணிவீர்
உய்வீர் உறுதியே யாம். 54

ஆலமணி நீழ லமர்ந்தோன் அநாதியவன்
ஆலமுண்ட கண்டத்தோ னாயபரன் - சீலஞ்சேர்
மைந்த னமர்மாவை வந்தணைமின் உந்தமது
பந்த மகலும் பறந்து. 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியொடு வாகை வளர்கமுகு தெங்குபலா
மன்னிவளர் மாவை மருங்கணைமின் - வன்னிநிதம்
போற்றி வளர்த்திடுநற் பூசுரர்கள் பூசிப்பர்
ஏற்ற முறுவீர் இனிது. 56

அடல்சே ரயிலேந்து மாவையரன் தம்மோ
டடல்செய் யவுண னடல்சே - ருடலை
இருபிளவா யாக்கி இணையடிசேர் வித்தான்
பெருநிலத்தோர் பேசும் வகை. 57

சம்பகஞ் சம்பகஞ் சார்சோலை மர்வையன்
சம்பகஞ் சேருந் தனயனவன் - பொன்பதமே
நம்பி யணைவீர் நலம்பெறுவீர் யானைமுகன்
தம்பி பதமே சதம். 58

தாமரைகள் வாழிடமுந் தாமரைசேர் பொய்கைகளும்
சேமமுறச் சேர்ந்திலங்கு சீர்மாவை - சேர்மின்
முருகன் கழல்பணிவீர் முன்வினைகள் போகும்
பெருகன் பொடுதினமு மே. 59

தாரக மான தலைவன் தனிமுதல்வன்
தாரக மாம்வடிவன் தம்பிமகிழ் - சீர்மாவை
சேர்மின் பணிமின் சேர்துயரந் தாமெல்லாம்
போமின் னெனவே புறம். 60

தால முதலா மரங்கள் தழைத்துவளர்
தால மதனில் தருக்கியமர் - பாலகனாம்
மாவை முருகன் மலரடிகள் போற்றிடவே
பால மகலும் பறந்து. 61

பானல் உறுகுளமும் பானல்வளர் கொல்லைகளும்
ஏனல் விளைநிலமும் ஏய்ந்திடுநற் - றானமதாம்
பொன்மாவை தன்னிற் பொருந்தி யருளுருக்கும்
எம்மானை யேத்து மினிது. 62

மணியோசை கேட்டு வணங்கிடுவோர் பல்லோர்
அணியணியாய்ச் செல்லு மருமாவை - காண்மின்
துயரந் தொலையும்மே தூமணிசேர் கோயில்
அயல்வந் தணைவோர்க்கும் மே. 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரந் தொறுமாவை வாரத்தோ டேகுபவர்
வாரம் பெறுவார் மயக்கொழிவார் - தேரும்
அணிசேர் பணிமாவை ஆலயத்தை என்றும்
பிணிபோக் கிடமெனவே பேசு. 64

நீபவந மாரும் நிமல னருண்மாவை
நீபவ நம்பரனை நித்தலுமே - பாபமற
ஏத்திடுக வாழ்த்திடுக இன்னருளைப் பெற்றிடலாம்
பூத்திரளோ டேக பொலிந்து. 65

ஆடக வாடகத்தே ஆடிடு மைம்முகன்றன்
பீடுடை மைந்தனெனப் பேருலகோர் - நாடியருள்
எய்து மிருமாவை எய்துவீர் துன்பமெலாம்
எய்தும் புறத்தே இனிது. 66

அளிசேர் மலர்கொண்டு ஆலயமார் மாவை
அளியோ டடைவார் பெறுவார் - கிளியேநீ
வந்திடுக கந்தனடி வாழ்த்திடுக வையமதில்
நொந்திடுதல் வேண்டா நொடி. 67

அம்புயனு மாலு மறியவொண்ணாத் தற்பரனின்
அம்புயனா மைந்த னருண்முருகன் - நம்பியமர்
மாவை தனையடைவீர் மாசுதனை நீக்கிடுவீர்
பாவை யனையீர் பரம். 68

கானகத்தில் வள்ளிதனைக் கண்டணைந்த கந்தனையுங்
கானகங்க ணோவக் கடிதணைமின் - ஞானமதை
ஓதுங் குமரன் உறுமாவை சென்றிடிலோ
தீதகலு மென்றே தெரி. 69

மந்திரங்க ளோதுபவர் மந்திரத்தில் வாழ்குகனைச்
சிந்தையிலே வைத்துநிதம் செய்பூசை - பந்தமதைப்
போக்குமிட மாமாவை புல்லர்காள் சென்றணைமின்
நாக்கொண்டு போற்றிடுவீ ரே. 70

கார்த்திகைமா தத்தினிலே கார்த்திகைசேர் நாளினிலே
கார்த்திகையான் சேவடியைக் காதலுடன் - சேர்த்துமனம்
வந்தனைகள் செய்திடுவார் மாவையிலே யார்குகனின்
அந்தமிலா ஆளாவா ரே. 71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி மதியினிலே ஆடுமயின் மீதேறி
ஆடி வருமெங்கள் ஆறுமுகன் - கூடிடுநன்
மாவைத் தலமதனை மாண்புடனே சேர்ந்திடுவீர்
தேவைத் தொழுவீர் தினம். 72

ஐப்பசிசேர் வெள்ளிதனில் அன்புடனே மாவைசென்று
செப்பு முறைப்படியே சேர்வணக்கம் - தப்பறவே
செய்வார் வினைதீர்வார் சேயருளாற் சேய்பெறுவார்
எய்தா ரிடரெதுவும் மே. 73

ஆறாகும் அந்தணர்கள் அன்புடனே ஆயிரமாம்
பேறான மந்திரத்தைப் பெட்புடனே - வீறாக
உச்சரித்துப் பூவை உதிர்த்திடுநன் மாவைதனை
நச்சிடுவீர் பூவையீ ரே. 74

அன்பன் அருணகிரி யார்செய் திருப்புகழை
இன்பம் பெருக இசைத்திடுவார் - துன்பமெலாம்
ஓடு மருமாவை உற்றிடுவீர் பொன்னுடனே
ஓடும் சமமே யுணர். 75

ஆரஞ்சேர் மார்பன் அறுமுகவன் மாவையுறும்
ஆரந்தோய் அம்புயத்தோ னாளாகி - வாரஞ்சேர்
நெஞ்சால் நினைந்துருகி நீடுபுகழ் பாடிடவே
பஞ்சாய்ப் பறக்கும் பவம். 76

தேரி லிவர்ந்துவரும் திவ்வியமாங் காட்சிதனைத்
தேரி லழித்தற் றொழிலேயாம் - பாரதனில்
அன்புடனே வந்து அடிபணியும் மாவைதனை
இன்புடனே கூடிடுவீ ரே. 77

அன்னம் அடியவர்க்கா ரன்பா யளித்திடுநல்
லன்ன நடையா ரடிபணியும் - பொன்மாவை
அன்புடனே செல்வோர் அருள்பெறுவ ரையமிலை
மன்பதைகாள் மாண்படைவீரே. 78

தலையே வணங்கிடுவாய் தாரகனைச் செற்ற
சிலைசே ரயிலோன்றன் சீரடிகள் - வேலையெறி
ஆழி யருகா வமர்மாவை வாழ்முருகன்
ஆழி யெனவே அறிந்து 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களே காணுங்கள் காசினியோ ரேத்துபுகழ்ப்
பண்கள் பரவும் பரமாவை - விண்கொள்ளா
ஆசையெலா மண்டி அடியவர்கண் ணீருகுக்க
ஆசையெலாம் போக்குமவை யே. 80

வாயே வழுத்திடுவாய் வையமெலாம் போற்றிடுமெந்
தாயே யனைய தயாபரனை - நேயமுடன்
பாடிப் பணிந்திடுவார் பத்தரெலா மாவையிலே
கூடிப் பணிபுரிவா யே. 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை
கரவெட்டி - தச்சந்தோப்புச்
சிந்தாமணி விநாயகர்மீது பாடப்பட்ட

# திருவிரட்டை மணிமாலை

காப்பு

## வெண்பா

சீர்சார் கரவெட்டி சேர்தச்சை வாழ்கின்ற
பேரார்சிந் தாமணியாம் பெம்மானே - நீராரும்
இப்புவியோர் வாழ்ந்திடவி ரட்டை மணி மாலைதனைச்
செப்பிடநின் றாளே துணை.

நூல்

## வெண்பா

சிந்தா மணியாந் திருநாமத் தைங்கரனே!
மைந்தர் படுந்துயர மாற்றுவது - சிந்தைதனில்
எண்ணவிலை யோவெமக்கிங் கேற்றமுறு தீவினைகள்
நண்ணவிலை யோவிலகு நாள். 1

## கட்டளைக் கலித்துறை

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுமெனக் கொண்டன மேபெருங் கோபுரஞ்சேர்
நாளு மடியர் வணங்கிடு நற்றளி தன்னிலுள்ளாய்
மாளு மடியர் மனத்துயர் போக்கிடு வாயரசே! 2

## வெண்பா

அரசே! படுந்துயர மாற்றிடவே வேண்டும்
கரையில் கடலாய்க் கவல்வேம் - தரைதனிலே
எம்மை மறந்தே யிருப்பதுவு மேற்குமோ
வெம்மை தவிர்ப்பீர் விரைந்து. 3

## கட்டளைக் கலித்துறை

விரைவினில் வந்துமே வெம்மை தவிர்த்திட வேண்டுமையா
தரையினில் நாம்படுஞ் சஞ்சலஞ் சொல்லுந் தரத்ததுவோ
கரைதெரி யாது கவலைக் கடலி லமிழுகிறோம்
வரையெனத் தோன்றும் வளர்கோ புரத்தளி வாழையனே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

ஐயனே! ஐங்கரனே! அம்பிகையின் பாலகனே!
துய்யனே! தேவர் துயர்தீர்த்த - மெய்யவனே!
காத்திடவே வந்திடுவீர் ஏத்திடுவோம் கைதொழுவோம்
பூத்திரளோ டென்றும் புகுந்து. 5

### கட்டளைக் கலித்துறை

பூத்திர ளோடுமுன் வந்துநின் பொன்னடி போற்றுகின்றோம்
ஏத்துவ மென்று மிலங்குநற் றீபங்க ளேந்திநிற்போம்
நாத்திக ரோடே யிணங்கலம் நாயக நாளுமெமைப்
பார்த்தருள் செய்குவை பாவிய மென்று பகைத்தனன்றே. 6

### வெண்பா

நன்றோடு தீதனை நாளுமே நாமறியோம்
குன்றெனவே மேல்விளங்குங் கோபுரஞ்சேர் - மன்றுடைய
தச்சைப் பதியாய்! தகவுடையாய்! ஐங்கரநம்
இச்சைதனைத் தீர்க்க விரங்கு. 7

### கட்டளைக் கலித்துறை

இரங்குவை நீயென வெண்ணிநின் போதாரிணையடிகள்
கரங்குவித் தஞ்சலி செய்துளம் நெக்கிக் கசிந்துருகிப்
புரண்டுமண் மேல்விழுந் தேசிரங்குட்டிப் புகலடைந்தோம்
பரம்பொரு ளேயருட் பண்ணவ னேயெமை யாளுகவே. 8

### வெண்பா

ஆளுகநின் னன்பரையிங் காதரிக்க யாருமிலைச்
சூழுந் துயர்கள் சொலற்கரிதால் - மீளுதற்கு
நல்லநெறி சொல்வாரும் நல்லநெறி நிற்பாரும்
இல்லைநெறி நீயே யிசை. 9

### கட்டளைக் கலித்துறை

இசையுடன் பாடியிங் கின்புறு மார்க்க மறிந்திலராய்த்
திசையெங்கு மோடித் தியங்கித் திரிவர் செகதலத்தோர்
அசைவில் நினதடி பற்றிச் சுகம்பெற வும்மறியார்
வசையுற்று வாழ வழிவகுத் தாரிந்த மண்ணிடத்தே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

மண்ணவரும் விண்ணவரும் வந்துதொழுந் தச்சைதனிற்
கண்ணின் மணியெனவே தான்விளங்கும் புண்ணியனே
வல்லபைக்கு நாயகனே! வான்சுடரே! போக்கிடுவாய்
அல்லறரும் தீவினையா மல். 11

### கட்டளைக் கலித்துறை

அல்லல் கெடவே யருளுக நின்றளி நாடிவந்துன்
பல்புகழ் பாடியு மாடியு நாந்தொழு வந்தினமே
தொல்லைக ளோடிடத் தூயவ நின்னருள் சுட்டிவந்தோம்
வல்வினை செய்தனம் மாண்களி றேதுயர் மாற்றுகவே. 12

### வெண்பா

மாற்றுகநம் வல்வினையை மாமறையின் மெய்ப்பொருளே!
ஆற்ற லிலமா யலைகின்றோம் - கூற்றுவராய்க்
குண்டு மழைபொழிந்து கொன்று குவிப்பதெலாம்
பண்டை வினையின் பயன். 13

### கட்டளைக் கலித்துறை

பண்டை வினையின் பயனின்று தூண்டவிப் பாரதனில்
அண்டர்கள் போலநம் மாற்ற லிழந்தே அலைந்தனம்யாம்
கண்டே யிரங்கிக் கருணைசெய் தாள்கபொற் கற்பகநம்
தொண்டினை யேற்றுநற் றூயவராக்கித் துயர்கெடவே. 14

### வெண்பா

துயர்கெடவே வேண்டுகிறோம் தொல்லுலகி லெங்கள்
அயர்வதனால் நின்னை அயர்த்தோம் - துயரதனைத்
தாங்கிடவே மாட்டோம் சரண மெனவடைந்தோம்
பூங்கழலோய் நெஞ்சிரங்கிப் போற்று. 15

### கட்டளைக் கலித்துறை

போற்றி யருள்க புகலடைந் தோம்நிதம் புந்திநொந்தோம்
ஆற்றல்கள் போக்கி அலைந்தோடி நாளு மகந்தொலைந்தோம்
சீற்றங்கொள் கூற்றுவன் தூதரை நேரும் கொலைத்தொழிலோர்
தூற்றி யழிப்பதுன் சோதனை யோவிங்கு தோன்றிவந்தே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

தோன்றியவை தாமறைதல் தொல்லுலகி லுண்டெனினும்
ஏங்கி யிடையழித லேற்புடைத்தோ – தீங்குசெயும்
புன்மையரின் வீறழித்துப் புந்தித் துயர்நீங்க
நன்மை யருள்வாய் நயந்து. 17

கட்டளைக் கலித்துறை

நன்மை யருள்பெற நாயக! நின்கழல் நாடிவந்தோம்
வன்மை புரிந்திடு மாற்றலர் நாளும் வருத்துகிறார்
அன்னையுந் தந்தையு மாகிய தேவ! அகங்குழைந்தே
பொன்னடி தாழ்ந்தனம் போற்றுக மூஷிகப் புண்ணியனே! 18

வெண்பா

புண்டரிகம் பூத்துவரும் பொற்கழலோய்! இம்பரொடும்
அண்டர் தொழுமானை ஐங்கரனே - பண்டுவந்த
மூலப் பொருளே! முனைப்பகைவர் நிற்பரோ
காலனென நீயெழுந்தக் கால். 19

கட்டளைக் கலித்துறை

காலக் கொடுமையாற் கண்ணீர் வடிக்கு நிலையடைந்தோம்
ஞாலத் தொருதனி நாயக னேயெமைக் காத்தருள்க
பாலொத்த வின்மொழிப் பார்ப்பதி யீன்றமுற் பண்ணவனே!
சேலொத்த வாள்விழி வல்லபை சேருஞ்சிந் தாமணியே! 20

திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

## இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்

# மும்மணிக்கோவை

காப்பு

### கட்டளைக் கலித்துறை

பரராச சேகர மன்னன் இணுவைப் பதிதனிலே
திரமாக நின்றிடச் செய்திடு மாலயம் தன்னிலுள்ளாய்
திருவாரு மும்மணிக் கோவையுன் மீதிலே பாடுதற்கு
உருவாகு முன்னடி என்மனத் தென்றுமே காப்பதுவே.

நூல்

வெண்பா

சீர்சே ரிணுவைதனிற் செல்வமாய் வீற்றிருந்து
பாரோர் தொழுநல்கும் பன்னிருகைக் - கூர்வேலோன்
முன்னவனே முக்கணனே முன்வினைகள் போக்கிடுவாய்
மன்னா மறவேன் மலர். 1

நேரிசை யாசிரியப்பா

மன்னா மறவேன் மலரடி தனையே
எந்நா ளும்நான் இறைஞ்சிடு கின்றேன்
பன்னா ளமரர் படுதுயர் கண்டே
முன்னா கப்போய் முறைதவிர் கயமுகன்
தன்னைத் தடிந்தே தருமம் காத்தாய்
இந்நா ளிங்கே இன்றமிழ் மக்கள்யாம்
சொல்லொணாத் துயரினால் துடித்திடு கின்றோம்
வந்து வெளிப்படு வரமதைத் தந்திடு
சிந்தை மகிழ்ந்திடச் சேயரைக் காத்திடு
அல்லும் பகலு முன்றன்
பல்புகழ் பாடிப் பரவுவோ மியாமே. 2

கட்டளைக் கலித்துறை

பாடிப் பரவும் பணியினை என்றுமிப் பாரினிலே
ஓடித் திரியினும் ஓய்ந்துமே விட்டு மறந்தறியோம்
ஆடித் தொழுமன்பர் ஆட்டங்கள் கண்டே அகமகிழ்வோம்
வாடித் திரியுமெம் வாட்டங்கள் போக்க வருகுகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

வாட்டங்கள் போக்கிடுவீர் வந்துதுணை செய்திடுவீர்
ஆட்டங்கள் நீக்கியெமை ஆதரிப்பீர் - ஓட்டமெலாம்
விட்டுமே நிம்மதியாய் வீடுகளில் வாழ்ந்திடவே
திட்டமாய்ச் செய்திடுவீ ரே. 4

நேரிசை யாசிரியப்பா

திட்டமாய்ச் செய்வார் தீமைகள் ஒழிப்பார்
அட்டதிக் கெங்கணும் ஆருமே இல்லை
எங்களைக் காத்திட எவருமே முன்வரார்
குண்டைப் பொழிகிறார் கொன்று குவிக்கிறார்
சண்டைதா னென்று சபதம் செய்கிறார்
வீட்டைவிட் டோட விரட்டி யடிக்கிறார்
கோயிலை அழிக்கிறார் கொடுமைகள் செய்கிறார்
நாயிற் கடையராய் நம்மை மதிக்கிறார்
தீயிலும் கொடிய தீயராய் இருக்கிறார்
அப்பனே அருளல் வேண்டும்
ஒப்பிலா மணியே உமையவள் மகனே. 5

கட்டளைக் கலித்துறை

ஒப்பிலா மாமணி ஓதருஞ் சீர்மணி யாயவுன்றன்
செப்பருஞ் சீருடைச் சீதள பாத மலர்களையாம்
அப்பொடு சேர்ந்த மலர்கொடு நாளுமர்ச் சித்திடுவோம்
இப்புவி தன்னில்யாம் எய்து மிடரெலாந் தீர்த்தருளே. 6

வெண்பா

இப்புவியில் நாங்களுறும் இன்னலுமோ எல்லையில
தப்புதற்கு மார்க்கமோ தானில்லைச் - செப்புதற்கு
நல்லறிவோர் தானுமிலர் நாயகனே என்செய்வோம்
வல்லவனே வந்தருள்வா யே. 7

நேரிசை யாசிரியப்பா

வல்லவ வந்தருள் வல்லபை நாயக
எல்லையில் லாவிடர் எய்துதல் காண்கிலை
சொல்லுவ தாரிடம் சோதனை போதுமே
கல்லெனும் நெஞ்சினர் கருணையோ அறிந்திலர்
தமிழருக் கிங்கொரு தாயகம் இலதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுவார் இடர்பல எய்தவே செய்கிறார்
பண்ணினில் இசையெனப் பாரினில் உயிர்தொறும்
வீற்றிருந் தருளும் விமலனே
போற்றுவோம் பொன்னடி புரந்தருள் வாயே. 8

கட்டளைக் கலித்துறை

போற்றுவம் பொன்னடி புன்மைகள் தீர்த்திடு பூரணனே
கூற்றென வந்துமே கொன்று குவிக்கிறார் கூர்கருணை
போற்றுத லென்பது பொய்வழி என்றுமே புன்மனத்தில்
தேற்றுதல் கொண்டவர் தீமைகள் செய்வதில் தீரரென்னே 9

வெண்பா

தீமைகளைச் செய்வதிலே தீரரவர் தாம்புரியும்
தீமைகளை நன்மையெனத் தேறிடுவார் - பூமியிலே
என்னபழி செய்தோம்நாம் எம்மிடர்கள் தீர்வதெப்போ
முன்னவனே வந்தருள்வா யே. 10

நேரிசை யாசிரியப்பா

முன்னவ முக்கண முன்னியே வந்தருள்
தென்னவன் போற்றிய தீந்தமிழ் பேசிடும்
நன்மைசேர் மக்கள்நாம் நாதனே காத்திடு
தொன்மைபோல் நாமெலாம் துயர்தவிர்ந் தெம்புவி
தன்னிலே மகிழ்வுடன் சார
உன்னருள் வேண்டும் உளங்கனி வாயே. 11

கட்டளைக் கலித்துறை

உன்னருள் வேண்டியே ஓடியாம் வந்துன் உபயபதம்
சென்னியிற் சேர்த்துமே சேவித்து நின்றோம் சிறப்புமிகு
பொன்மய மானவுன் போதம் நிறைந்திடு மாலயத்தில்
துன்னியே தொண்டுகள் செய்குவம் தீர்ப்பாய் துயரினையே. 12

வெண்பா

தொண்டுகளைச் செய்திடுவோம் துன்பமெலாம் தீருமென
அண்டியே வந்துன் அடிபணிவோம் - எண்டிசையும்
ஏத்தும் இறைவா இனிதருள்வா யானைமுகா
தோத்திரங்கள் செய்வோம் துணை. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேரிசை யாசிரியப்பா

தோத்திரம் செய்வோம் துயர்தவிர்த் தருள்வாய்
பூத்திரள் கொண்டு பொன்னடி தொழுவோம்
பாலொடு தேனும் பாகொடு பருப்பும்
நாலுங் கலந்து நாம்தந் திடுவோம்
கரும்புட னிளநீர் கருதிடு மவல்முதல்
விரும்பிடு முணவெலாம் விளங்கவே தருவோம்
ஐயா அவற்றை அன்புடன்
மெய்யா யேற்று வினைதவிர்த் தருளே. 14

### கட்டளைக் கலித்துறை

மெய்யாக ஏற்றுமே மேதினி தன்னிலே மேன்மையுடன்
பொய்யாம் பழிகளைப் போக்கிப் புரந்திடு வாயிறைவா
ஐயா அணிமருப் பொன்றுள ஆனை முகமுடையாய்
துய்யா தொழுவோம் துணையடி தம்மைத் துயரறவே. 15

### வெண்பா

தொழுவோமே என்றுந் துணையடிகள் தம்மைப்
பழுதிலா அன்புடனே பாரில் - அழுதழுது
வந்திப்போம் வாழ்த்திடுவோம் வாயார உன்புகழைச்
சிந்திப்போம் செய்வாய் துணை. 16

### நேரிசை யாசிரியப்பா

துணையினைச் செய்வாய் தூயவ னேயுன்
அடியினை யென்றும் அவனியில் மறவேம்
உண்ணநல் லுணவிலை உடுக்கநல் லுடையிலை
இருக்கப் படுக்க இசைந்ததோர் வீடிலை
போக்கு வரவு செய்யவும் நல்ல
வாகன வசதி தானுமே யில்லை
கோயில்கள் பற்பல கொடுமையாய்ப் பூட்டப்
பட்டே உள்ளன பார்தனில் இந்தக்
கொடுமையை யாரிடம் கூறுவோம் நாதா
அடியோம் படுதுயர் அகற்றக்
கடிதினில் வருவாய் கணபதிக் கடவுளே. 17

### கட்டளைக் கலித்துறை

கடிதினில் வந்தே கருணை புரிவாய் கணபதியே
அடியோம் படுதுய ராற்றிட ஆளிலை அஞ்சலித்தோம்
படியினி லேசெய் பழவினை யாதென நாமறியோம்
கொடிதே அடியோம் படுதுயர் யாவும் குறைத்தருளே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

கொடியதுதான் யாதெனவே கூறிடுக வென்று
படியதனிற் பாலனவன் கேட்க - விடையாகக்
கற்றறிந்த ஔவை கழறினாள் காய்வறுமை
உற்றறிவீர் என்றே உணர்: 19

நேரிசை யாசிரியப்பா

உற்றறி வீரே உண்மையை நீவிர்
கற்றறி புலவீர் மற்றுள மக்காள்
வறுமையி னாலே வாடுவோர் பல்லோர்
இருக்க இடமிலை ஏதும் தொழிலிலை
உண்ண உணவிலை உடுக்க உடையிலை
படுக்க இடமிலைப் பாலகர் தம்மொடு
எம்மிடர் தீர்ப்பா ரெவரோ
நம்மிறை வனையே நாடுவோ மியாமே. 20

கட்டளைக் கலித்துறை

நம்மிறை வாவென நாடியே வந்துமே நாம்பணிவோம்
இம்மென வந்தே இடர்களைந் தாண்டருள் செய்குவையே
இம்மா நிலந்தனில் எய்து மிடர்களோ எல்லையில
கைம்மா முகத்தாய் கடிதினி லேவந்து காத்தருளே: 21

வெண்பா

கைம்மா முகமுடையாய் காசினியைக் காத்திடுவாய்
இம்மா நிலத்தில் எமைவருத்தும் - பொய்ம்மாயத்
துன்பங்கள் போக்கித் துயர்துடைத்தே எந்நாளும்
இன்பம் தருவாய் இசைந்து. 22

நேரிசை யாசிரியப்பா

இன்ப மெய்துவ தெப்பொழு தென்று
துன்பக் கடலிலே தோய்ந்திடும் நாங்கள்
பன்னா ளாகப் பார்த்திருக் கின்றோம்
நன்மை வருமடை யாளமு மில்லை
தோன்றி மறையும் மின்னலைப் போலத்
தோன்றிய முயற்சிகள் தோல்வியில் முடிந்தன
யாம்செய் பாவ அநுபவம் முடியும்
காலம் வருமெனக் கருதவு மிடமிலை
என்றே தோன்று கின்றது
உன்றாள் சரணம் சரணந் தானே. 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

உன்றாள் சரணநல் ஓங்கார மூலப் பரம்பொருளே
நன்றாந் துணையா யிருந்த தநுவென நல்லநெஞ்சில்
அன்றறி வோரெண்ணி அன்பு செலுத்தியே ஆனபயம்
ஒன்றாது வாழ்ந்தனர் ஊமர்க ளாயின முண்மையிதே. 24

### வெண்பா

ஊமர்களாய்ப் போயினமே உண்மையறி வற்றனமே
காம ரணையுங் கழலடிகள் - சேமமென
எண்ணா திருந்தோம் இடர்கள்பல எய்துகிறோம்
மன்னா எமையாள வா. 25

### நேரிசை யாசிரியப்பா

மன்னா எமையாள் மாநில மதனில்
இன்னா தனபல எய்துகி றோமே
வீடுக ளிழந்தோம் விளைநிலம் இழந்தோம்
மாடுக ளிழந்தோம் மண்ணையு மிழந்தோம்
கோயில்க ளிழந்தோம் கும்பிடல் ஒழிந்தோம்
நாட்டினை இழந்தோம் நம்மினம் பிரிந்தோம்
தேடிய பொருளெலாம் தெருவிலே விட்டோம்
சொல்லொணாத் துயர்களைத் துடைக்க
வல்விரைந் தோடி வந்தருள் செய்யே. 26

### கட்டளைக் கலித்துறை

வல்விரைந் தோடியே வந்தருள் செய்திட வேண்டுகிறோம்
கல்லெனும் நெஞ்சுடைக் காவலர் தங்கள் மனந்திருத்தி
நல்வழி காட்டியே நானிலம் நன்கு நலமுறவே
செல்வழி தன்னிற் செலுத்துக சீருடைச் செய்யவனே. 27

### வெண்பா

செல்வழியிற் சேர்த்திடுவாய் சேமமுறக் காத்திடுவாய்
அல்வழியிற் செல்லா தகற்றிடுவாய் - நல்வழியை
நாங்கள் கடைப்பிடிக்க நாதனே நல்லருள்செய்
பூங்கமல பாதம் புகல். 28

### நேரிசை யாசிரியப்பா

பாதம் துணையெனப் பற்றிநின் றோம்யாம்
ஏதம் விளைந்திடா தென்றுமே காத்திடு
கணபதி சரணம் கயமுக சரணம்
ஆகுவா கனனே ஐங்கரா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கா ரமெனும் உருவா சரணம்
அங்குச பாச மேந்துவாய் சரணம்
ஈசன் மைந்தனே இறைவனே சரணம்
வல்லபை மணாளா வானவர் தலைவா
எல்லையில் இடர்களை நீக்கி
நல்லருள் புரிவாய் ஞானநா யகனே. 29

### கட்டளைக் கலித்துறை

நல்லருள் வல்லபை தன்மண வாளனே நாமணைந்தோம்
எல்லையில் லாதன வாகிய இன்னல்கள் தீர்த்தருள்வாய்
ஒல்லையில் வந்தே உயர்வழி காட்டிடு ஊனமறச்
செல்வழி காட்டும் திருவார் பதிசீர் இணுவையிலே. 30

மும்மணிக்கோவை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## இணுவில் கந்தசுவாமி

# திருவிரட்டை மணிமாலை

### காப்பு

#### கட்டளைக் கலித்துறை

செகராச சேகரப் பேர்பெறு பிள்ளையே தேசமெலாம்
சுகமாக வாழ்ந்திட வேண்டி இணுவிற் பதிதனில்வாழ்
குகனா மிறைவனின் மீதிலே யான்ரட்டை மாலையினை
அகமே மகிழ்வுற ஆக்கிட உன்னடி காப்பதுவே.

### நூல்

#### வெண்பா

சீரிணுவை வாழ்முருகா சேயரெமைக் காத்தருள்வாய்
சேரிடமே தானறியா தேகுகிறோம் - ஓரிடமும்
இல்லையே நாங்கள் இடரொழிந்து வாழ்வதற்கு
ஒல்லையே ஓடிவா வா. 1

#### கட்டளைக் கலித்துறை

ஓடியே வாவென் றுளநொந்து வேண்டினோ முன்செவியிற்
கூடவே யில்லையோ குற்றங்கள் யாம்பல செய்ததுண்டோ
தேடவுங் கூடாத் திருவடி காட்டி அடியவரைப்
பாடவும் பண்ணிப் பயன்பல செய்தனை பண்புடனே. 2

#### வெண்பா

பண்புடனே வந்திடுவாய் பாவியரைப் பார்த்தருள்வாய்
நண்புடனே காப்பதற்கு நாதரிலைத் - துன்பமெனும்
எல்லையிலாச் சாகரத்து ளெய்தியே மாளுகிறோம்
வல்லைதனில் வந்திடுவா யே. 3

#### கட்டளைக் கலித்துறை

வந்திடு வாயென மான்புடன் வேண்டி வணங்கிடுவோம்
புந்தியி லன்பொடு போற்றுவம் நின்னடி போதமிலா
மந்தைய ராகியே மாசறு தீவினை செய்தமையால்
அந்தோ இவணா மடைந்திடு மின்னல் அளப்பரிதே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

இன்னல்களோ எல்லையிலை ஈசனையும் தாம்நினையார்
முன்னை வினையாலே மூழ்குகிறார் - பன்னெடுநாள்
துன்பக் கடலதனில் தூயவர்க ளாவதென்றோ
இன்பப் பெருமா னிசை. 5

கட்டளைக் கலித்துறை

இன்பப் பெருமா னிரங்கியே வந்தெமை யாண்டருள்வாய்
அன்பர்க் கிரங்குவாய் ஆறுதல் செய்குவா யென்றணைந்தே
நின்பக்கல் வந்து நிதமும் தொழுது நினதடியர்
என்றொக்கல் கூற இயைந்தோ மிறைவா இனியவனே. 6

வெண்பா

இனியவனே ஈசனுக்கும் எய்தியதோர் நாதா
கனியதனைப் பெற்றிடுதல் வேண்டி - அணியுடைய
நீலமயி லேறி நிகரிலா வேகமொடு
ஞாலமெலாம் சுற்றியசீ லா. 7

கட்டளைக் கலித்துறை

ஞாலந் தனில்வாழ் நரரெலா முன்னடி நாடியின்று
ஓல மிடுவது முன்செவி தன்னிலே உற்றிலதோ
காலன் விடும்பல தூத ரெனவே கடுகிவந்து
பாலர் விருத்தர் எனவே யெணாது பருகுவரே. 8

வெண்பா

பருகுவரே ஆருயிரைப் பார்தனிலே இன்று
உருகுவதும் தானறியார் ஊமர் - தருமமதைச்
சற்றுமே பாரார் தமிழர் படுதுயரை
உற்றுமே ஓரார் உரை. 9

கட்டளைக் கலித்துறை

உற்றுமே ஓர்ந்திட உன்னடி தன்னையே நம்பியிங்கு
சுற்றமாய் வந்தனம் சூழ்ந்துமே நொந்தனம் தூயவனே
பற்பல தொல்லைகள் பண்ணிய சூரனைப் பார்புகழ
விற்றிறங் காட்டி வியப்புடன் ஆட்கொண் டருளினையே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா

வியப்புடனே ஆண்டனையால் விண்ணவரும் மண்ணும்
நயப்புடனே போற்றினரே நன்கு - பயத்துடனே
குற்றேவல் செய்து குறுகியன்று வாழமரர்
நற்றவத்தால் நன்மைபெற்றா ரே. 11

## கட்டளைக் கலித்துறை

நற்றவம் செய்ததால் நன்மை யடைந்தவர் நானிலத்திற்
பற்பல ரென்று பகர்ந்திடும் பண்டைய நூல்களெலாம்
சற்றுமே உன்னடி சார்ந்திடல் போற்றிடல் செய்தலின்றிக்
கற்றை யிருளென வந்திடு மின்னலாற் காய்குவரே. 12

## வெண்பா

காய்ந்திடுவர் சோகமதாற் கண்ணீர் உகுத்திடுவர்
பாய்ந்துவரு நீத்தமெனப் பன்னாளும் - ஏய்ந்துவரும்
இன்னல் தனையெண்ணி ஏங்கிக் கலங்கிடுவர்
மன்னா எமையாள வா. 13

## கட்டளைக் கலித்துறை

மன்னர கடப்ப மலரணி மார்பசீர் மால்மருகா
பன்னா ளிவணாம் படுதுயர் காண்கிலை யோமுருகா
இந்நா ளெமைக்காத் திடவரு வாரோ எவருமிலர்
அன்னை யெனவந் தழித்திடு வாயெங்கள் ஆகுலமே. 14

## வெண்பா

அழித்திடுவாய் ஆகுலங்கள் ஆறுதலைத் தந்து
பழித்திடவே வாழும் பயஞ்சேர் - இழிப்புடைய
வாழ்க்கை தனையொழித்து வையமதி லுன்னதமாம்
வாழ்க்கை தனையடைய வை. 15

## கட்டளைக் கலித்துறை

வைத்திடு நன்னிலை தன்னிலே தாழ்ந்து வருத்தமுறும்
புத்திர ராகிய போதமு றுந்தமிழ் மக்களையே
இத்தரை தன்னிலே எம்மிடர் தீர்ப்பா ரெவருமிலர்
பத்தியாய்ப் பாடுறோம் பார்த்தருள் செய்வாய் பரஞ்சுடரே 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

பரஞ்சுடரே பார்வதியின் பாலகனே சூரன்
உரங்கிழிய எய்த ஒளிசேர் - சரம்பொருந்து
விற்படையாய் வெற்றி விறற்படையாய் நாடிவந்தோம்
அற்புதனே ஆண்டருள்வா யே. 17

### கட்டளைக் கலித்துறை

ஆண்டருள் வாயென அண்டினோ முன்னடி ஆறுதல்செய்
பூண்டருள் கொண்ட புனித புதல்வராம் நாமினியே
காண்டலும் செய்யோம் கருதோ மெவரையும் காசினியில்
மாண்டே யொழியினும் நாமற வேமுன் அடியிணையே. 18

### வெண்பா

அடியிணையே தஞ்சமன்றி ஆம்வழிவே றில்லைப்
படியினையே நாங்களுறும் பாடு – மூடிவதெப்போ
வள்ளி மணவாளா வானவரைக் காத்ததுபோல்
துள்ளி வருவாய் துணை. 19

### கட்டளைக் கலித்துறை

துள்ளியே வந்திடு தோமறக் காத்திடு சூரனன்னார்
எள்ளியே செய்திடு மேதங்கள் போக்கிடு வாயிறைவா
கள்ளமி லன்பொடு காதலம் நாமுன் னடிவணங்க
மெள்ளவே வந்து விழுமிடம் சீரார் இணுவையதே. 20

இணுவில் கந்தசுவாமி
திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## இணுவில் சிவகாமியம்மை

# திருவிரட்டை மணிமாலை

காப்பு

கட்டளைக் கலித்துறை

பரராச சேகரப் பேர்பெறு நாயக பாரிலுள்ளோர்
திரமாக வாழ்ந்திடச் செய்திட வல்லவ தீயவைகள்
தூரமாக ஓடிட வேண்டிச் சிவகாமி மீதிரட்டைச்
சரமாக வேமணி மாலையைப் பாடநீ காத்தருளே.

நூல்

வெண்பா

சிவகாமித் தாயே திருவளிக்குந் தேவி
அவமாக அல்லலுறு கின்றோம் – தவமேதும்
செய்ய அறியோம்யாம் தீவினைகள் தீர்வதெப்போ
உய்ய வழியுரைப்பா யே. 1

கட்டளைக் கலித்துறை

உரைப்பா ரெவரு மிலையே உயவழி தானறியோம்
கரைப்பார் கரைக்கக் கல்லுங் கரைந்திடு மென்பர்முன்னோர்
திரைப்பா லமுத மெனவே திகழ்ந்திடு தேவியுனைத்
தரைப்பாற் றுணையாய்த் தனயர்யாம் சார்ந்தனம் தாங்குகவே

வெண்பா

தாங்குகவே தாரணியிற் சற்சனர்கள் தம்மைநிதம்
பாங்குறவே சேர்ந்து பயன்பெறவும் - ஓங்குபுகழ்
பெற்றுமே வாழ்ந்திடவும் பெம்மான் திருவடிகள்
உற்றுமே ஓய்ந்திடவு நீ. 3

கட்டளைக் கலித்துறை

ஓய்வது தானின்றி ஓடுகின் றோமெமைக் காத்திடுக
பாய்வது பூண்டிடு கங்கையே யாமெனப் பாரினிலே
நோவதைத் தந்திடு மொன்னலர் செய்திடு மின்னல்களைப்
போய்விடச் செய்திடு பூதலத் தோர்புகழ் பூரணியே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

பூரணியே காரணியே பொற்புடனே நல்லறிவும்
தாரணியிற் றானருளும் தாயுனையே - பாரினிலே
நற்றுணையும் நீயெனவே நாடியிவண் வந்தனமே
பெற்றனமே உன்பாதப் பற்று. 5

கட்டளைக் கலித்துறை

பற்றறப் பாதை அறிகிலம் பாரினிற் பஞ்செனவே
சுற்றுவோம் தொல்லைகள் எல்லையில் லாமலே சூழுகின்ற
சற்றுமே ஒய்விலைத் தாயே தமியேம் படுதுயரை
உற்றுமே போக்கி உறுதுணை தான்செய் உமையவளே. 6

வெண்பா

உமையே சிவகாமி உன்னடியோம் எங்கள்
தமையே மறந்திடுதல் சால்போ - அமைவாரும்
நல்லறங்கள் நாமுஞற்ற நன்மையெலாந் தானடைய
வல்லவளே வாழ்வருளு வாய். 7

கட்டளைக் கலித்துறை

வாழ்வருள் வாயென வந்து நிதமுனைத் தாள்பணிவோம்
சூழ்வோம் தொழுவோம் சுடர்விளக் கேற்றுவோம்
தோத்திரிப்போம்
கோள்பல குற்றமும் போக்கிடு வாயெனக் கும்பிடுவோம்
நாள்பல வாயினும் நம்பினோம் நாயகி நன்மைசெய்யே. 8

வெண்பா

நன்மைகளைச் செய்திடுவாய் நாயகியே நாங்களுறும்
புன்மைகளை யேவிலக்கிப் புத்தியருள் - இம்மையிலே
நற்செயல்கள் செய்திடவும் நாடிஇன்பம் சேர்ந்திடவும்
கற்புடைய பூரணியே கா. 9

கட்டளைக் கலித்துறை

காத்திட வேண்டுமே கானகந் தன்னிற் கடியவரி
பார்த்திட நின்ற பயங்கொள் பசுவெனப் பார்தனிலே
தீத்திறத் தாரால் தினமுந் தியங்கிக் கலங்கிடுவோம்
தீர்த்திடு வாரிலைத் தீமைகள் தாமுங் குறைந்திலவே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

தீமைகளுந் தான்குறையா தீர்வுகளும் வந்தணையா
ஆமைதனின் வேகமென ஆகுதிங்கே - பூமியிலே
நல்லவழி சொல்வாரில் நல்லவழி கேட்பாரில்
நல்லவழி நாடுவா ரில். 11

கட்டளைக் கலித்துறை

நல்ல வழிதனை நாயகி நீயருள் வாயெனவே
அல்லும் பகலும் அணைந்துன் திருவடி போற்றிடுவோம்
ஒல்லும் வகையில் உனது பணிகள் உஞற்றிடுவோம்
தொல்லை வினைகளைத் தூரவே போக்கிடு தூயவளே. 12

வெண்பா

தூயவளே தாயனையாய் தொல்லைகளைப் போக்கிடுவாய்
ஆயகலை யெல்லாம் அளித்திடுவாய் - போயகலத்
துன்பந் துடைத்திடுவாய் தூயவழி காட்டிடுவாய்
இன்பந் தரவோடி வா. 13

கட்டளைக் கலித்துறை

ஓடி வருவாய் உறுதுயர் தீர்த்திட வேண்டுமம்மா
நாடி வருவோம் நறுங்கொன்றைத் தாராற்கு நாயகியே
கூடிப் பணிவோமுன் கோயிலைப் பன்முறை சுற்றிடுவோம்.
பாடிப் பரவும் பணியினைச் செய்வோம் பயன்பெறவே. 14

வெண்பா

பயன்பெறவே யாம்வருவோம் பார்தனிலே முன்செய்
நயமிலாத் தீயசெய லாலே - துயருறுவோம்
சீருடைய தாயே சிவகாமி யம்மையுன்
பேரருளைத் தாராய் பெரிது. 15

கட்டளைக் கலித்துறை

பெரியது யாதெனப் பேர்நிலத் துள்ளோ ரறிவதற்காய்
அரிய முருகன் அறைகுவை யென்னஔ வைக்கிழவி
பெரியது தொண்டர் பெருமை யெனவுறப் பேசினளால்
அரிய தெதுவென ஆய்ந்திடு வோமிவ் வவனியிலே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

அரியதுதான் மானுடராய் ஆருலகிற் றோன்றி
உரியமுறை தானம் தவஞ்செய் - பெருமைபெறல்
என்றே இயம்பினளே ஏருடைய ஔவையெனும்
நன்றாம் பெருமையினள் நாடு. 17

கட்டளைக் கலித்துறை

நன்றாம் பெருமை நயந்தே பெறவிங்கு நாடிடுவீர்
பொன்றாப் புகழுடைப் பூரணி யாஞ்சிவ காமிபதம்
என்றும் மறந்திடா தேற்ற தரும வழியதனில்
நின்றா லிடரெலாம் நீங்கிடும் நல்ல நெறியிதுவே. 18

வெண்பா

நல்லநெறி நாடிடுவோம் நன்மையெலாம் பெற்றிடுவோம்.
அல்லநெறி செல்லா தகன்றிடுவோம் - தொல்லையெலாம்
தூரவே போகும் துயர்துடைப்பா ளெம்மம்மை
பார்வதியின் பாதம் துணை. 19

கட்டளைக் கலித்துறை

பாதந் துணையெனப் பற்றிநின் றாலிந்தப் பாரதனில்
ஏதம் விளைந்திடா தெய்தும் பெரும்பயன் என்றென்றுமே
காத லுடன்பல காலும் கசிந்து கசிந்துநின்றால்
சீத மலரடித் தாய்சிவ காமி சிறந்துறுமே. 20

இணுவில், சிவகாமியம்மை
திருவிரட்டை மணிமாலை முற்றிற்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தெல்லிப்பழை கிழக்கு
## கோயிற்புலச் சிவபெருமான்
# திருவூஞ்சல்

காப்பு

சீர்பூத்த யாழ்ப்பாண நாட்டின் கண்ணே
சிறப்பார்ந்த தெல்லிப்பழை கிழக்கில் வாய்ந்து
பேர்பூத்த கோயிற்புலக் கோயில் வைகும்
பெருமானாம் சிவனார் மேல் ஊஞ்சல்பாட
நார்பூத்து நம்பனடி யவர்கள் வேண்ட
நாயினேன் அதற்கியைந்தே யாக்கி நல்கக்
கார்பூத்த யானைமுக முடைய முன்னோன்
கணபதிதன் திருவடிகள் காப்ப தாமே. 1

இருக்குமுதல் நால்வேதம் தூண்க ளாக
இசையுமுப அங்கமெலாம் விட்டமாக
அருக்கனென ஒளிகாலும் மணிக ளார்ந்த
அட்டதிக்குப் பணிகளெலாம் வடமதாகப்
பொருப்பெனவே உயர்தங்கப் பலகை சேர்த்துப்
பொலிவுபெற அமைத்திடுநல் லூஞ்சல்மீது
சிறப்புடனே யமர்ந்தெங்கள் சிறுமை தீரச்
சிவபெருமா னானவரே யாடி ரூஞ்சல். 2

ஆதவனும் அம்புலியுங் கவிகை தாங்க
ஆரணனும் நாரணனும் கவரி ஓங்கச்
சீதவரி இறைஆல வட்டம் ஏந்தத்
திருமறலி வேத்திரங்கை தாங்கி நிற்கப்
பாதமலர் மீதுமலர் பல்லோர் தூவப்
பாரிலுளோர் துயர்தீர்க்கும் கருணை மேவ
ஏதமில்சீர்க் கோயிற்புலக் கோயில் மேவும்
எழிலாரும் சிவனாரே யாடீரூஞ்சல். 3

செம்பவளத் தம்பமிரு பாலும் நாட்டித்
திகழுமர கதத்தாலுத் தரங்கள் மாட்டி
அம்புவியோர் புகழ்வயிரக் கழிகள் நீட்டி
அவிர்படிகத் தகடுமிசை யாக மூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்புகழ் துகிலதனால் விதானங் கட்டி
ஒண்தரள வடத்தினவிர் ஊஞ்சல் மேவி
நம்பெருமான் கோயிற்புலம் தன்னில் வாழும்
நலமாருஞ் சிவனாரே யாடீருஞ்சல். 4

சங்குதுடி பேரிமுத லியங்க ளார்ப்பச்
சகலவுயிர்த் தொகுதிகளும் மகிழ்ச்சி கூர்ப்பப்
புங்கவர்கள் மலர்மாரி யெங்குந் தூர்ப்பப்
புத்திசைசேர் யாழினொலி சித்த மீர்ப்ப
அங்கமெலாம் அடியர்குழாம் புளகம் போர்ப்ப
அரகரவென் றன்பினோடு மங்கை கூப்பத்
துங்கமிகு கோயிற்புலக் கோயில் வாழ்ந்து
துயர்தீர்க்கும் சிவனாரே யாடீருஞ்சல். 5

அண்டரெனும் பூசகர் ஆரணங்கள் நாட
அடியவர்க ளரகரவென் றருகு கூடக்
கண்டெனவே இனியமொழி பயிலு நல்லார்
கானமயி லாமெனவே களிப்பொ டாடத்
தொண்டுபடு மன்பர்நிதம் பண்கள் பாடச்
சூழவுறு மாலமரச் சோலையூடு
கண்டுவணங் கிடுமடியர் கவலை தீர்க்கும்
கருணைநிறை சிவனாரே யாடீருஞ்சல். 6

இச்சகத்திற் றனைநினைவோ ரிடரைப் போக்கும்
ஏகதந்தக் கணபதியாம் பிள்ளை யோடு
பச்சைமயில் வாகனனும் அருகே மேவப்
பண்ணவராம் விண்ணவர்பல் லாண்டு பாட
அச்சுதனும் ஆரணனும் அண்டி வாழ்த்த
அம்பொன்மய அம்பலத்தி னருளே பூண்டு
நச்சரவக் கச்சசைத்து நடன மாடும்
நாயகராம் சிவனாரே யாடீருஞ்சல். 7

ஓங்குதலை மாலையுப வீத மாட
உறுபணியா லாம்வாகு வலய மாடத்
தேங்குநதி பிறையினொடு சடையு மாடத்
திருநுதன்மேல் ஒளிர்நயனந் தேசோ டாடப்
பாங்குருறும் அடியவர்கள் களியோ டாடப்
பரிவினொடு மரம்பையர்கள் நடன மாட
வீங்குபுகழ்க் கோயிற்புலக் கோயில் மேவும்
விறலாருஞ் சிவனாரே யாடீருஞ்சல். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையுரி யுடையாரே யாடீ ரூஞ்சல்
எப்பொருளு முடையாரே யாடீ ரூஞ்சல்
மானமருங் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
மந்திரவக் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
வானமதிக் கண்ணியரே யாடீ ரூஞ்சல்
வழுத்துபவர்க் கண்ணியரே யாடீ ரூஞ்சல்
ஞானபரி பூரணரே யாடீ ரூஞ்சல்
நம்பனெனுஞ் சிவனாரே யாடீ ரூஞ்சல். 9

நான்மறைகள் ஆகமங்கள் நாளும் வாழி
நல்லதிரு முறைபத்தோ டிரண்டும் வாழி
வான்முகில்கள் மழைபொழிந்து நாடு வாழி
மடமகளிர் கற்புநெறி மன்னி வாழி
சான்மருவும் உழவர்தொழில் சால வாழி
தண்மைமிகு கோயிற்புலச் சூழல் வாழி
தேன்மருவு கொன்றைமலர் வேணி யண்ணல்
செம்மையுமை யம்மையொடு வாழி வாழி!

## எச்சரிக்கை

தேவாசுரர் முதலோர்க்கதி தேவாவெச்ச ரிக்கை
தேனார்மொழி மானாளுமை தேவேயெச்ச ரிக்கை
மாவார்ழ்மல ரணிநேர்பணி வைத்தா யெச்சரிக்கை
வானோர்சிர மேலேயுறு மணியே யெச்சரிக்கை. 1

திருநீறணி யுருமேவிய தேசா வெச்சரிக்கை
சிரமார்தரு மறைமேலுறு தெளிவே யெச்சரிக்கை
கருநீறுற வடியார்க்கருள் காண்பா யெச்சரிக்கை
கலையாமறி மழுவோடுறை கரனே யெச்சரிக்கை. 2

பற்றார்புர மெரியூட்டிய பகவா வெச்சரிக்கை
பாங்கார்திசை யுடையாய் மழுப்படையா யெச்சரிக்கை
கற்றார்புக ழொளியே யருட்கடலே யெச்சரிக்கை
காரார்குழ லுமைதன்னருங் கணவா வெச்சரிக்கை. 3

தெல்லிநகர்க் கோயிற்புலக் கோவே எச்சரிக்கை
தேன்பிலிற்றுங் கொன்றைமலர்த் தாராய் எச்சரிக்கை
நல்லவர்கள் வாழ்வுயரச் செய்வா யெச்சரிக்கை
நாடுநலம் பெறவேயருள் புரிவா யெச்சரிக்கை. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

கோயிற்புலக் கோயில்வாழ் கோவே பராக்கு
குளிர்மதியும் நதியுமணி சடையாய் பராக்கு
தாயிற் சிறந்திடு மன்புத் தலைவா பராக்கு
தரணிமகிழ்ந் திடநன்மை புரிவாய் பராக்கு. 1

ஐந்தொழில்கள் புரிகின்ற அரசே பராக்கு
அயனொ டரியானவர்க்கும் தலைவா பராக்கு
இந்துவளர் சடைமுடியாய் இறைவா பராக்கு
எவ்வுயிர்க்கும் மேலான ஈசா பராக்கு. 2

தில்லையில் நடமாடும் தேவா பராக்கு
தீயவர்கள் ஓய்வுபெறச் செய்வாய் பராக்கு
நல்லுயிர்கள் வாழ்வுபெற நல்காய் பராக்கு
நாமெலாம் நன்மைபெற அருள்வாய் பராக்கு. 3

ஆனைமுக ராறுமுகர்க் கத்தா பராக்கு
ஆலவிட முண்டவரு ளாளா பராக்கு
வானிலுறை தேவர்பெரு மானே பராக்கு
வானநதி சூடுமுடி வள்ளல் பராக்கு. 4

## மங்களம்

மங்களம், மங்களம், மங்களம், - நித்தியசுப
மங்களம், மங்களம், மங்களம். 1

ஆதியந்த மில்லாதார்க்கு
அரியசோதி வடிவினர்க்குப்
பாதிமதி சூடினர்க்குப்
பரமன் என்னும் பேரினர்க்கு - (மங்) 2

எட்டுவடி வுடையவர்க்கு
ஏகனாக நிற்பவர்க்குப்
பிட்டமுது கொண்டவர்க்குப்
பிரம்படியும் பட்டவர்க்கு - (மங்) 3

கோயிற்புலம் வாழ்பவர்க்குக்
கொன்றைமாலை சூடினார்க்குத்
தாயிற்சிறந் திடுங்கருணை
தான்கொண்ட நாயகர்க்கு (மங்) 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

## அளவெட்டி, கும்பழாவளை விநாயகர்

# திருவிரட்டை மணிமாலை

காப்பு

கட்டளைக் கலித்துறை

மலரினை யிட்டு வணங்கு மடியவர் வேண்டுவன
கலைக ளருள்கும்ப ழாவளை வாழுங் கணபதியே
உலகம துய்ந்திட வேண்டியுன் மீதி லிரட்டைமணி
மலையது பாட அடியனை உன்பதம் காப்பதுவே.

வெண்பா

உலகம் புகழ்ந்தேத்து மோங்கார ரூபா
அலகில்சீ ராரறிய வல்லார் - நிலையினின்று
சுற்றிவலம் வந்தரனைத் தோத்திரித்து மாம்பழத்தைப்
பெற்றிடநீ வல்லயலை யோ.

கட்டளைக் கலித்துறை

அலையாரு மார்கலி சூழ்தரு பூமியில் வாழ்வுறுவார்
கலைதேரும் போதிற் கணபதி யேதுணை யென்றிடுவார்
தலைதனில் மும்முறை குட்டியுன் முன்னரே தாழ்ந்தெழுவார்
சிலையென வெண்ணுஞ் சிதடரறியாருன் சீரினையே.

வெண்பா

சீர்கும்ப ழாவளைவாழ் செல்வ விநாயகனே
ஏரும்ப ரேத்து மெழிற்பதியில் - நீர்தங்கு
தீர்த்தக் குளத்தருகே திவ்வியமாங் கோயிலுளீர்
பார்த்தருள்வீ ரையா பரம்.

கட்டளைக் கலித்துறை

பரனரு ளமகிழ் பால பயிரவன் சோதரனே
கரமைந் துடைய கணபதி யேபுய மாமுகனை
உரமே கிழியவுன் கொம்பாற் றடிந்துமே உம்பர்தமைத்
திரமாக வாழ்ந்திடச் செய்த திறமதைப் போற்றுவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

போற்றற் குரியவனே புன்மையெலாம் போக்கிடுவாய்
சாற்றற்கரிய சரணமதைத் - தேற்றமுடன்
என்றுமே ஏத்த இனிதருள்வா யானைமுகா
பொன்றும் பொருளாசை போக்கு.

கட்டளைக் கலித்துறை

போக்கும் வரவும் புணர்வுமில் லாத புனிதவுன்றன்
காக்கும் கழல்கள் தமைமறந் தேயிங்கு வாழுவனோ
நீக்க மறவே நிறைந்துநிற் பாயுன்னைத் தன்மனத்தே
ஆக்க மறந்தவ ராரிடர் தீர்ந்தா ரவனியிலே.

வெண்பா

அவமாக வேபொழுதை ஆக்குவா ருன்னைத்
தவமாக வேதுதிக்க எண்ணார் - சிவபாலா
மைந்தர் பிழைபொறுத்து மாண்புடனே நல்லருளைத்
தந்தருள்வா யையா சரண்.

கட்டளைக் கலித்துறை

சரணார விந்த மதுசூட வெண்ணா ருனைமறந்து
முரணா ரழியும் நிலையுறும் போதினில் மூவசை போய்த்
திரனா ரழிந்த நிலைகண்டே யேங்கித் தியங்குவரே
அரனா ரளித்த வழகா வடியோமைக் காத்தருளே.

வெண்பா

காத்தருள் வீரென்று கைதொழுவார் தம்மைநிதம்
பார்த்தருள் செய்யும் பரனேயுன் - ஏத்தரிய
பொன்னடியைப் போற்றிடுவோம் பூரணனே எங்களுக்கு
நன்னெறியைக் காட்டிடுவா யே.

கட்டளைக் கலித்துறை

வாயா லுனையென்றும் வாழ்த்திட வெண்ணார்தம் வன்றலையால்
சேயா முனையே வணங்கிட வெண்ணார் தினமுமிங்கே
நாயா யலைந்து திரிவார் எவர்க்குமே நன்மை யிலார்
தீயாரைச் சேருவார் தீர்த்திட மாட்டார்தம் விக்கினமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா

விக்கினங்கள் தீர்ப்பவனே வீரமெலா மீபவனே
துக்கமெலாம் போக்கியெனைத் தூயவர்கள் - தக்கவனே
என்றேதான் கூறிடவே எய்தவையப்பா யேரம்பா
என்றுமே யுன்றான் துணை.

கட்டளைக் கலித்துறை

துணையா யிருப்பார் பலரென வெண்ணித் துயருழந்தேன்
அணையா விளக்கா யமைந்திடு நீயன்றி வேறொருவர்
துணையாக மாட்டா ரெனவறிந் தேயுன் துணையடிகள்
புணையாகப் பற்றிநின் றேனைப் புரந்திடு தேவமுதே.

வெண்பா

தேவர் துயர்தீர்த்த தேவாதி தேவநிதம்
பூவதனில் நாங்களிடர் தானடைதல் - போவதுதான்
இல்லையோ ஈசா எமைமறந்தே நீயிருந்தால்
தொல்லையே எம்வாழ்வு தான்.

கட்டளைக் கலித்துறை

வாழ்வதும் தாழ்வதும் நாமுன்பு செய்த வினைப்பயனே
ஊழ்வினை யென்ப திதுவே இதனை ஒழிக்க வுன்னைச்
சூழ்தலும் தாழ்தலு மன்றிப் பயனில வேற்றுவழி
ஆழ்கடல் சூழ்புவி உள்ளோர் இதனை அயர்த்தனரே.

வெண்பா

அயர்த்தா ரறவழியை ஆர்நிலத்தி லுய்தார்
துயர்தான் தொடரப் பெறுவார் - மயல்போக்கி
உன்னை நினையாதார் உன்னடியைத் தான்பணியார்
முன்னை வினைப்பயனா லே.

கட்டளைக் கலித்துறை

பயனை யறியாது பாவ வழிசெல் பதடிகளே
அயனைச் சிறைசெய் யறுமுக னண்ணனை யேதினமும்
பயமுறு பத்தியாய்ப் பாதந் தொழுமின் பயன்பெறுவீர்
கயமுக னைக்கொன்ற கடவு ளுங்களைக் காப்பரன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

காக்குங் கணபதியைக் காதலித்து நாடோறும்
பூக்கொண்டு பொன்னடியைப் போற்றிடுமின் - நாக்கொண்டு
ஏத்திடுமி னென்றென்று மெய்திடுவீ ரின்பமதைத்
தீத்திறத்தைச் சேரா திரும்.

### கட்டளைக் கலித்துறை

சேரா விடந்தனைச் சேர்வது தீதென வேபெரியோர்
ஆராய் வுடனே அறிவுரை கூறிவைத் திட்டனரே
சீராக வாழ்ந்திட வேண்டுமெ னிற்கும்ப மாவளைவாழ்
பேரார் கணபதி நாமந் தினந்தினம் பேசுவமே.

### வெண்பா

பேசும் பெரும் பொருள் பெம்மான் திருவடி
பூசும்வெண் ணீறு புனைவதற்குக் - காசிலுயர்
கண்டிகையு முண்டவற்றைக் காதலுடன் கொண்டிடுவீர்
எண்டிசையும் போற்று மினிது.

### கட்டளைக் கலித்துறை

இனிதாக வாழ இதயத்தி லேயெண்ணு மேதிலரே
கனியாய் விளங்குங் கணபதி யைத்தினங் காதலித்துப்
பனியார் மலர்கள் பதமலர் மீது சொரிந்திடுவீர்
இனிதே யகன்றிடு மேதமெ லாமிவ் வுலகினிலே.

திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்

## கும்பழாவளைச் சப்பரம்

கும்பழாவளைச் சப்பரம் — அது
கோலாகலமான சப்பரம்
நம்பினோர்க் கருளும் நாயகன்
நயந் தெழுந் தருளும் சப்பரம்:
மூன்றுவாசல் கொண்ட சப்பரம் — அது
முடிகள் ஐந்துகொண்ட சப்பரம்
ஈன்ற நாயகனும் இளைய நாயகனும்
இனிதெழுந் தருளும் சப்பரம்.
ஐந்தடுக்குள்ள சப்பரம் — அது
அழகு மிக்குள்ள சப்பரம்
தந்தி மாமுகனை நம்பியே வாழும்
தரணியோர் போற்றும் சப்பரம்.

## கும்பழாவளைத் தேர்த்திருவிழா

தேரில் வாறார் மூத்த பிள்ளையார்
தேரில் வாறாரே
தேரில் வாரார் கணபதியார்
தேரில் வாறாரே.

ஆனைமுக முடையபெம்மான்
தேரில் வாறாரே
பானைவயி றுடையபெம்மான்
தேரில் வாறாரே.

விக்கினங்கள் தீர்த்திடுவார்
தேரில் வாறாரே
துக்கமெலாம் நீக்கிடுவார்
தேரில் வாறாரே.

அன்பர்களுக் கருள்புரிவார்
தேரில் வாறாரே.
துன்பமெலாம் போக்கிடுவார்
தேரில் வாறாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்கட் கருள்புரிவார்
தேரில் வாறாரே
மிடிகளெலாம் போக்கிடவே
தேரில் வாறாரே.

ஆகுவாக னமுடையார்
தேரில் வாறாரே
பாகுகனி மொழியுமையாள்
பாலன் வாறாரே.

வல்லபை மணாளன் முதல்
தேரில் வாறாரே
வள்ளிமண வாளன் இரண்டாம்
தேரில் வாறாரே.

அம்மையப்பர் மூன்றாவது
தேரில் வாறாரே
எம்மையெலாம் காத்திடவே
தேரில் வாறாரே.

தேரில் வடம் பிடித்திடவே
அன்பரே வாரீர் — தேவர்
ஊரில் இடம் பிடித்திடவே
அன்பரே வாரீர்.

## கும்பழாவளைத் தீர்த்தத் திருவிழா

(பிள்ளையார்)

தீர்த்தக் குளத்துக்குச் சென்ற அந்தத்
திவ்விய காட்சியைக் கண்டேன் நானன்று
பார்த்திடக் கண்கள் போதாவே—அதைப்
பகர்ந்திட நாவொன்று போதுமோ அம்மா
கொடிகள் குடைகளைத் தாங்கித் தொண்டர்
கூட்டம் முன்செல்ல முழங்கிட மேளம்
அடியவர் சாமரை வீசப்—பல
அன்பர்கள் அரகர வென்றார்ப் பரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளிற் பக்தர்கள் பல்லோர்—அங்கு
பத்தியா யிருந்து பார்த்துக் களிக்க
அடியவர்க் கருள்புரி ஐயன்—அன்று
அங்கெழுந் தருளிய ஆனந்தக் காட்சி:
கண்கொள்ளாக் காட்சியதாகும்—அது
கற்பனைக் கெட்டாத காட்சியே யம்மா
எண்ணத்தில் அடங்காத காட்சி—அது
எழுத்திலும் சொல்லிலும் அடங்கிடாதம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாட்டிலும் ஆன்மீக வாழ்க்கையிலும் தாம் பெற்ற அறிவை முற்றாகப் பயன்படுத்தி நிறை வாழ்வு வாழ்ந்தவர் எங்கள் வணக்கத்துக்குரிய திரு. செ. சிவசுப்பிரமணியம் ஐயா அவர்கள். விழிசிட்டிக் கிராமத்துக்கு அணி செய்தவர்கள். பக்தியிலும், பண்பாட்டிலும், திருமுறைப் பயிற்சியிலும், புராணங்களைப் போற்றுவதிலும் இவ்வூர் மக்களுக்கு நிகரானவர்கள் இல்லை என்றே கூறலாம். இந்த அடிப்படையில் இந்நூலாசிரியர் அருட்பாக்களைப் பாடியும், புராணங்களுக்கு விரிவுரை செய்தும், ஆசிரியப் பணியிலும் அதிபர் பணியிலும் மிக ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கி வந்தமை கண்கூடு. தம் ஊரைவிட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்த நேரத்திலும் சலனமற்ற உள்ளத்தினராய் ஆலயங்கள் மீது பாமாலை பாடி இன்புற்றவர்.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

போஸ்கோ பதிப்பகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org